Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | வைகாசி 29 திங்கட்கிழமை (12.06.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 175

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இலங்கையில் அடுத்தமாதம் பெரும் போர் மூளும்

## நாடு பிரிவுபடுவதும் தவிர்க்க முடியாதாம்
## சர்வதேச இராஜதந்திரிகள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கையில் பெரும்போர் மூளுமென சர்வதேச் இராஜதந்திரிகள் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணி, முடிவின் விளிம்பிற்கு வந்து விட்டதாக கூறியுள்ள இராஜதந்திரிகள் ஜுலை மாதத்தில் இலங்கையில் பாரிய யுத்தம் வெடிக்குமெனவும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அதேவேளை ஜுலை மாதத்தில் ஏற்படவுள்ள யுத்தம் இலங்கைத் தீவை இரண்டாகப் பிரித்தால் அதனைத் தடுப்பது கடினம் என்றும் அவர்கள் இலங்கை அரசுக்கு கூறியுள்ளதாகவும் செய்திகள் கசியத்தொடங்கியுள்ளன.

அடுத்த மாதம் இலங்கையில் யுத்தம் மூளுவதற்கான சாத்தியப்பாடுகள் பல இருப்பதாக கூறியுள்ள சர்வதேச இராஜதந்திரிகள் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்தமையும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் எதுவும் இலங்கை அரசின் கைவசம் இல்லாமையும் யுத்தம் வெடிப்பதற்கான முக்கிய ஏதுக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கிளைமோர் இரண்டு பொதுமக்கள் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலைப்பாணியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த்தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் நேற்றுக் காலை 6.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இரு பொதுமக்கள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்துள்ளனர். (ந-5)

## தளபதி மகேந்தியின் இறுதி நிகழ்வு பளையில்



மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளம் காட்டுப்பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினரின் கிளைமோர்த்தாக்குதலில் வீரச்சாவடைந்த தளபதி லெப். கேணல் மகேந்தியின் இறுதி அஞ்சலி நிகழ்வு பளையில் நடைபெற்றது.

பளை காவல்துறைப் பணிமனையில் நேற்றுக் காலை நடைபெற்ற இந் நிகழ்விற்கு அரசியல்துறைப்போராளி விடுதலை தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரினை மாவீரர் லெப்.கேணல் மகேந்தியின் தந்தையார் ஏற்றினார். வித்துடலுக்கு மாவீரரின் துணைவியார் சுடரேற்றி மலர்மாலையினையும் அணிவித்தார்.

தொடர்ந்து வித்துடல் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அஞ்சலிக்காக வைத்த பின்னர் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது. (ந-5)

## திருநெல்வேலியில் கைக்குண்டு வீச்சு ஒரு சிப்பாய் ; 9 பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

திருநெல்வேலி பலாலி வீதியில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தில் படைச்சிப்பாய் ஒருவரும் பொதுமக்கள் 9 பேரும் காயமடைந்துள்ளனர். வி.சிவசுதன் (வயது 23, யாழ்ப்பாணம்), என். விஜயகுமார் (வயது 40, கொக்குவில்), வைத்திலிங்கம் உதயகுமார் (வயது 34, அல்லைப்பிட்டி), வி.சிவசாந்தினி (வயது 24, உரும்பிராய்), முருகையா முருகமூர்த்தி (வயது 45, திருநெல்வேலி), ரி.திவாகரன் (வயது 26, கொக்குவில்), (10 ஆம் பக்கம் பார்க்க)

## வவு. இராணுவம் சூடு; மீசாலை இளைஞன் பலி



(வவுனியா)

வவுனியா பண்டாரிக் குளத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானவர் மீசாலையைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெகநாதன் (வயது 24) என இனங்காணப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த பிரஸ்தாப நபர் பிஸ்ரல் ரக துப்பாக்கியால் தம்மைச் சுட எத்தனித்ததாகவும் அதன் போது தாம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-12)

## நோர்வேயின் கேள்விகளுக்கு பதிலளிக்க அரசாங்கம் தயார்
### அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தினால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கும் பதில் அளிப்பதில் அரசாங்கத்திற்கு எதுவித பிரச்சினைகளும் இல்லை என்று தேசிய பாதுகாப்பு பேச்சாளரும் அமைச்சருமாகிய ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சமாதான செயற்பாடுகளில் அரச கூட்டுப் பங்காளிகளிடம் இருந்து ஏதாவது நிபந்தனைகள் திணிக்கப்பட்டால் அதனை உரியவாறு எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமாதான செயற்பாடுகளுக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையே பிரதான அம்சமென கூறப்பட்டுள்ளது. எனினும் வன்முறைகள் உக்கிரமடைந்துள்ள நிலையில் அவ்வுடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளதாக அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்தார்.

இந் நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் முறையாக மதிக்கின்றார்களா? என்பதை எழுத்துமூலமாக அறியத்தருமாறு இரு தரப்பினரிடமும் சமாதான அனுசரணையில் ஈடுபட்டுள்ள நோர்வே அரசாங்கம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வங்காலையில் கொல்லப்பட்டோரின் இறுதி நிகழ்வு ஆயிரக்கணக்கான பொது மக்கள் பங்கேற்றனர்









மன்னார் வங்காலையில் இராணுவத்தினரால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வரின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை நடை பெற்றது.

மன்னார் புனித ஆனாள் தேவாலயத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இறுதிப் பிரார்த்தனை நடைபெற்றது. இதில் மன்னார் ஆயர் ராயப்பு யோசப் மற்றும் சேவியர் குருஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதன் பின்னர் வங்காலை மயானத்தில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஈபிஆர்எல்எப்(சுரேஸ்) உறுப்பினர்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட 5ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர்.

வங்காலையைச் சேர்ந்த மூர்த்தி மார்ட்டின் அவரதுமனைவி, மகன், மகள் ஆகியோரை மிகக் கோரமாக இராணுவத்தினர் படு கொலை செய் தனர். மூர்த்தி மார்ட்டினின் மனைவி சித்திராவை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி கொடூரமாக சித்திரவதை செய்து படுகொலை செய்துள்ளனர்.

மூர்த்தி மார்ட்டினின் மார்பிலும் வயிற்றிலும் குத்தி கொலை செய்துள்ளனர். அவரது 9 வயது மகள் ஆன் லூக்சியாவின் பிறப்புறுப்பில் குத்தி படுகொலை செய்துள்ளனர். 7 வயது மகன் ஆன் நில்க்சனைக் காயப்படுத்தி வயிற் றில் குத்தி படுகொலை செய் தனர்.

படுகொலை செய்யப்பட்ட வீட் டில் கடந்த 8ஆம் திகதி காலை 10 மணியளவில் கண் டெடுக்கப்பட்ட படையினரது 3 சீருடைகளை மன்னார் மேல திக நீதிபதி டி.ஜே. பிரபாகரனிடம் பொதுமக்கள் ஒப்படைத்தனர்.

இருப்பினும் கடந்த வெள்ளிக்கிழமை படைத்தரபின ருடனான மன்னார் ஆயர் ராயப்பு யோசப் நடத்திய சந் திப்பின் போது இச்சம்பவத்தில் படைத்தரப்பினருக்கு தொடர் பில்லை என்று மறுத்துள்ளனர். படுகொலை செய்யப்பட்டோரின் உடைகளை தடய அறிவியல் பரிசோதனைக்காக அனுப்பி

## வகுப்புகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் நடைபெறுகின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் கலந்துகொள்ளாத மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று திங்கட்கிழமை ஆரம்மாகவுள்ளது.

எனவே இன்று ஆசிரியர்கள் மாணவர்களை சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கே.எம்.கனகலிங்கம் கேட்டுள்ளார். (க-52)

## கடற்படையினரின் உத்தரவு?

காரைநகர் பகுதியில் இரவு 7 மணிக்கு பின்னர் எவரும் நடமாடக்கட்டாது என கடற்படையினர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் மாலை 6 மணிக்கு பின்னர் வீடுகளுக்குள்ளேயே முடங்கி விடுகின்றதாகவும் இரவு வேளைகளில் நோயால் அவதிப்படுபவர்களைக் கூட விடிந்த பின்னரே மருத்துவமனைக்கு கொண்டுசெல்வதாகவும் கூறப்படுகிறது. (கு)

## சிறு விளம்பரம்

விற்பனைக்கு உண்டு

நல்ல இன ஆட்டுக்கிடாய் விற்பனைக்குண்டு 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (C/340)

## அடிக்கல் நாட்டும் வைபவம்

நிக்கொட் திட்ட நிதியுதவியுடன் 80 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கரவெட்டி கமநல சேவை நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் யாழ்.மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷ் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டிவைக்கவுள்ளார். இக்கட்டடம் கரவெட்டி விவசாய சவம் அமைந்துள்ள காணியிலிலேயே அமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கமநல சேவை, உதவி ஆணையாளர் சுந்தரேசன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளதாக புலோலி அம்மன் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் என்.உருத்திரேசன் அறிவித்துள்ளார். (க-52)

# உயர் தரத்தில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி வேலை வாய்ப்பைத் தேடும் இளைஞர்களை ஆக்கபூர்வமான தொழிலில் ஈடுபடுத்துவதற்கான பயிற்சி வேலைத் திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புவோரிடமிருந்து தொலைக்கல்வி திட்டப் பணிப்பாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிலற்ற பொருளாதார கஷ்டத்துக்கு மத்தியில் க.பொ.த. உயர்தரம்) கற்ற பாடசாலையிலிருந்து விலகிச் செல்வோருக்கு உதவும் முகமாக சேவைப்பயிற்சிக் காலத்தின் போது மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். இக்கொடுப்பனவு விண்ணப்பதாரிகள் தமது உணவு, தங்குமிடம், போக்கு வரத்து போன்வற்றுக்கான செலவுகளுக்காகவே வழங்கப்படுகிறது.

எனினும் தொழிலை நோக்கமாகக் கொண்ட குறித்த தேவைக்கேற்ற பாடநெறியைப் பின்பற்றுபவர்களுக்குப் பாடநெறிக் கட்டணம் மாத்திரம் செலுத்தப் படுமேயன்றி வேறெந்த மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரரின் குடும்ப மாதாந்த வருமானம் ரூபா 10 ஆயிரத்துக்கு குறைவாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் வயது 2005 டிசம்பர் 31இல் 22க்குக் குறைவாக இருப்பதுடன் 2004/2005 க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றி வேலை வாய்ப்பின்றி இருக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15.7.2006 ஆம் திகதிக்கு முன்

திட்டப்பணிப் பாளர், தொலைக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (DEMP) நாவல வீதி, நாரே ஹேன்பிட்டி கொழும்பு-5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் ஆங்கில மொழியில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும். மேல்விபரங்களை 9.6.2006 அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். (கு)

# இராசிபலன்

12.06.2006
(வைகாசி 29, திங்கட்கிழமை)
பிரதமை முன்னிரவு 11.02 மணிவரை
கேட்டை காலை 6.07 மணிவரை
மூலம் பின்னிரவு 5.46 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை

மேடம்: பொருள் விரயம், சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு.

இடபம்: முழங்கால் வலி, மனக்கவலை, பிரயாண பயம், காரிய தடங்கல்.

மிதுனம்: மனோ தைரியம், கீர்த்தி, பொருள் சேர்க்கை, சயனசுகம்.

கடகம்: ஆரோக்கியம், தடைப்பட்ட காரியம், கைகூடும், மனமகிழ்ச்சி, சத்துருஜெயம்.

சிங்கம்: அஜீரண ரோகம், காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், நிலைமாற்றம்.

கன்னி: மனச்சஞ்சலம், தனவிரயம், புதிய விடயம், முயற்சி தாமதம்.

துலாம்: மனோதைரியம், இனிய சம்பவம், வாகன சுகம், நற்கீர்த்தி.

விருச்சிகம்: போசனசுகக்குறைவு, கெரவக் குறைவு, பொருள் விரயம், வேலைச்சுமை.

தனுசு: மாதுர்நட்பு, வெகுமானம், தொழில் முயற்சி, கௌரவமான நிலை.

மகரம்: சோம்பல் நிலை, முயற்சி தாமதம், அமைதிக்குறைவு, பணவிரயம்.

கும்பம்: சயனசுகம், குடும்ப மகிழ்ச்சி, தன தானிய சேர்க்கை, பெருமையடைதல்.

மீனம்: இஷ்டசித்தி, ஆரோக்கிய நிலை, போசன சுகம், அதிகாரம்.

- வளவன்

# சிறைச்சாலைகளை பார்வையிட பாடசாலை மாணவர்களுக்கு அனுமதி?

வழங்குவதுகுறித்து சிறைச்சாலை திணைக்களம் ஆராய்வு

பாடசாலை மாணவர்களுக்கு சிறைச்சாலைகளை பார்வையிட அனுமதிவழங்குவது குறித்து சிறைச்சாலைத் திணைக்களம் ஆராய்ந்துவருகிறது.

குற்றங்களை இழைத்துவிட்டு சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் குற்றவாளிகளின் நிலைமை குறித்து நேரடியாக மாணவர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பை இதன் மூலம் பெறு வார்கள் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் வஜிர விஜ குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் சிறைச்சாலையைப் பார்வையிட்டு பெறும் அனுபவத்தின் பலனாக அவர்கள் குற்றம் இழைப்பதை குறைந்துவிடுவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். பாடசாலை மாணவர்களுக்கு குற்றம் செய்வோருக்கு கிடைக்கும் தண்டனைகள் குறித்து குற்றங்கள் தொடர்பான அடிப்படை விளக் கங்களை பெற்றுக்கொடுப்பதன் மூலமும் சட்டத்தை மதிக்கும் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (கு)

# மண்சரிவு அபாயம்

கொத்மலை நீரேந்துப் பகுதிகளிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மண்சரிவு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக கட்ட ஆராய்ச்சி அமைப்பின் நிபுணர் விஜய விக்கிரம தெரிவித்துள்ளார்.

மாரவில, மாஸ்வெவ, பரந்தர மற்றும் கொத்மலை ஆகிய பகுதிகளிலேயே அதிகமாக மண்சரிவு ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் இதற்கான காரணத்தைக் கண்டறிய ஆய்வுகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் செயற்பாடுகளை விரிவான முறையில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் மேலதிக நிதியை வழங்க வேண்டும் என குழுவின் புதிய ஆணையாளர்கள் கேட்டுள்ளனர்.

நிதி பற்றாக்குறை காரணமாக ஏறத்தாழ 10 ஆயிரம் முறைப்பாடுகளை சரிவர விசாரணை செய்ய முடியவில்லை என்றும், தமக்கு 15ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (கு)

# தொழில் நுட்பக் கல்லூரி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம்

(கொழும்பு)

தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைவாக 13"X8" என்ற அளவில் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பகுதி 12இல் கூறப்பட்டதற்கிணங்க ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தை இடவேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 23.6.2006 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் குடியதாக உரிய தொழில் நுட்பக்கல்லூரியின் அதிபருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

தகைமையுடையோர் உளச்சார்புப் பரீட்சைப் பெறுபேற்றுடன் அல்லது நேர்முகப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

முழுநேரக் கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கு அவர்களது குடும்பப் பொருளாதார நிலைக் கேற்ப வகுப்புகளுக்குச் சமூக மணிக்கும் நாளொன்றுக்கு உதவிக் கொடுப்பனவாக 20ரூபா வீதம் மாத மொன்றுக்கு ரூபா 450/க்கு மேற்படாத கொடுப்பனவு வழங்கப்படும்.

முழுநேரக் கற்கை நெறியினைத் தொடரும் குறைந்தவருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களில் 600 பேருக்கு வருடமொன் றுக்கு ரூபா 2500/ வீதம் உதவு தொகை வழங்கப்படும்.

விண்ணப்பங்களுடன் ஆவணங்களின் மூலப்பிரதிகளோ அல்லது புகைப்படப் பிரதிகளோ இணைக்கப்படலாகாது.

மேல் விபரங்களை 9.6.2006 ஆம் தேசிய அரச வர்த்த மானியில் பார்வையிடலாம். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் திகதிக்குப் பின்னரே அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு பின்னர் மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது.

இதற்கமைய ஜனாதிபதி மஹிந்தவின் ஆலோசகர்கள் நால்வரும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் இந்த அமைச்சரவை மறுசீரமைப்புக்கான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சுக்களை வேறுபடுத்தல், நிர்வாகத்தை இலகுபடுத்தல் மற்றும் அதற்கான சட்ட நடவடிக்கைகள் என்பன பற்றி இந்தக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் பேராசிரியர் கமல் கருணாநாயக்க, தம்மிக அமரசிங்க உட்பட மஹிந்தவின் 4 ஆலோசகர்கள் அமைச்சரவை மறுசீரமைப்பு பற்றிய நடவடிக்கைகளை பூர்த்திசெய்த பின்னர் நல்ல நேரத்தில் அதனை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மஹிந்தவின் அலரிமாளிகைச் செய்தி தெரிவிக்கிறது. (க)

# தீர்க்கமான முடிவு எடுக்கப்படாததால் கடற்கண்காணிப்பு புறக்கணிப்பு

கடற்கண்காணிப்புப் பணிகளில் கண்காணிப்புக் குழுவினர் ஈடுபடுவது குறித்து ஒஸ்லோவில் முடிவெதுவும் எடுக்கப்படாததால் கடற்கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே உள்ளன.

இந்த விவகாரத்தில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும்வரை கடற்கண்காணிப்பில் கண்காணிப்பாளர்கள் ஈடுபடமாட்டார்கள் என்றே தெரியவருகிறது.

குறிப்பாக சொல்ஹெய்மின் கடிதத்திற்கு புலிகள் பதிலளித்த பின்னரே இதுகுறித்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படலாம் என்றும் அதுவரை கடற்கண்காணிப்புப் பணிகளிலிருந்து தொடர்ந்தும் தற்காலிகமாக விலகியிருக்கவும் கண்காணிப்புக் குழு முடிவு செய்துள்ளது. (க)

# கண்காணிப்பு நடவடிக்கைகள் முடங்கியுள்ளதாக க.கா.குழு தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் வழங்கிய ஆணைக்கு அப்பால் செயற்படமுடியாது என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையை அமுலாக்கும் நடைமுறை தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் முடங்கியுள்ளதாகவும் கண்காணிப்புக் குழு கூறுகின்றது.

இதேவேளை, சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேயை தமிழீழ விடுதலைப் புலிகள் அவமதித்துவிட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அனுரபிரியதர்சன யாப்பா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒஸ்லோ மாநாட்டில் பேச்சுக்குழுவில் இடம்பெறாதவர்கள் எனக் கூறி அரச தரப்பினருடன் பேச புலிகள் மறுத்துவிட்டமை நோர்வே அரசை அவமதிக்கும் செயல் என்றே கூறவேண்டும்.

பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரச தரப்புத் தூதுக்குழுவினரின் பெயர் விபரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தன.

நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன் விடுதலைப் புலிகளும் இதனை அறிந்திருந்தனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க)

# தனியார் மருத்துவமனைகள் வியாபார நிலையங்களாகி விட்டன

## பிரதி சுகாதார அமைச்சர் கவலை

(கொழும்பு)

தனியார் மருத்துவமனைகள் வியாபார நிலையங்களாக மாறிவிட்டன. இதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. தனியார் மருத்துவ நிலையங்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் போன்று காட்சியளிக்கின்றன என்று பிரதி சுகாதார போஷாக்கு நலத்துறை அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தனியார் மருத்துவ நிலையங்களை பதிவுசெய்தல் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறுகையில்,

இன்று நாட்டில் தனியார் வைத்திய நிலையங்கள் 5 நட்சத்திர ஹோட்டல்களாக காட்சியளிக்கின்றன. சாதாரண மக்களால் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சேவைகளைப் பெற முடியாதுள்ளது.

இந்நிலையில் மேற்படி சட்டமூலம் தனியார் மருத்துவ சேவையை சீர்படுத்தும் என்று நம்புகின்றோம். இன்றைய நிலையில் தனியார் மருத்துவர்கள் உண்மையான மருத்துவர்களா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

தனியார் மருத்துவம் இன்று வியாபாரமாக மாறியுள்ளது. இதனை எம்மால் அனுமதிக்க முடியாது.

எந்நோயானாலும் தனியார் மருத்துவமனைகளில் ஒரே வகையான மருந்துகளே கிடைக்கின்றன. இது என்ன நியாயம்?

நாட்டில் அதிகமான சட்டவிரோத மருத்துவர்கள் இந்த சட்டமூலம் அமுலுக்கு வந்ததும் வீடுசெல்ல நேரிடும். இந்த சட்டமூலம் அமுக்கு வந்ததும் அடிக்கடி தனியார் மருத்துவமனைகள் கண்காணிக்கப்படும் என்றார். (க-9)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

வடக்கு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் நெடுந்தீவு பிரதேசத்தில் மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறும் வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கவுள்ளது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் தெரிவுசெய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. (க)


## பால்காப்பு

பருத்தித்துறை ஓடக்கரை பத்திரகாளி கோயில் 13.06.2006 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை அடியார்கள் பால்காப்பு சாத்தி வழிபடலாம்.

சுபம்

தர்மகர்த்தா

(441)


# யாழில் படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கும்

## எல்லாளன் படை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் எதிர்வரும் நாட்களில் படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கும் என எல்லாளன் படை அறிவித்துள்ளது.

இதுகுறித்து அறிக்கை ஒன்றை விடுத்திருக்கும் எல்லாளன் படை,

தமிழ் மக்கள் மீது கொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஆக்கிரமிப்புப் படைகள் யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறும்வரை தாக்குதல்கள் தொடரும் என எச்சரித்துள்ளது.

தற்பொழுது பொங்கியெழும் மக்கள் படையால் படையினர் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதலுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் எல்லாளன் படை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள பொங்கியெழும் மக்கள் படை, மாணவர்களின் உயர்தர பொதுப்பரீட்சையையொட்டி தாக்குதல்கள் தணிக்கப்பட்டிருந்ததாகவும் அடுத்துவரும் தினங்களில் படையினரின் மற்றும் ஒட்டுப்படையினரின் மீதான தாக்குதல் உக்கிரமாக மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

பரவலாகவும் தொடர்ச்சியாகவும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பொதுமக்களை அநாவசியமான போக்குவரத்துக்களைத் தவிர்க்குமாறு பொங்கியெழும் மக்கள் படை அறிவித்துள்ளது. (க)

# கிளைமோர்த் தாக்குதலில் நிக்கொட ஊர்தி சிக்கியது

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடுவில் நிக்கொட் மாவட்ட துணைப் பணிப்பாளர் சென்ற ஊர்தி ஆழ ஊடுருவும் இராணுவ அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடந்த இத்தாக்குதலில் ஊர்தி சேதமானதுடன் ஊர்தியில் பயணித்தவர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

நெடுங்கேணியின் கிராமங்களில் தங்கள் திட்ட நடவடிக்கைகளை பார்த்துத் திரும்பிய போது இந்த கிளைமோர்த் தாக்குதல் நடந்தது. (க)

## 'பூபாளராகங்கள்' சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் கொம்மந்தறையில் அமைந்துள்ள கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக்கிளை கடந்த ஆண்டு 'பூபாள ராகங்கள் -2005' நிகழ்வை முன்னிட்டு நடாத்திய இரண்டாவது உலகளாவிய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற 13 சிறுகதைகள் உள்ளடங்கிய பூபாள ராகங்கள் சிறுகதைத் தொகுதி 2005 மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 25ஆம் திதகி ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு லண்டன் சிவன் கோவில் விழா மண்டபத்தில் தமிழறிஞர் பேராசிரியர் கோபன் மகாதேவா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலாநிதி செவாலியர் தமிழ்க்கங்கை, இளவாலை அமுது தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க பொருளாளர் அ.திருக்கேதீஸ்வரன் ஆகியோர் ஆசியுரை வழங்க, நூலகவியலாளர் என். செல்வராஜா நூல் வெளியீட்டுரை நிகழ்த்தவுள்ளார்.

ஆய்வுரைகளை எழுத்தாளர்களான விமல் குழந்தைவேல், சாம் பிரதீபன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இதேவேளை ஆறுதல் பரிசு பெற்ற லண் டனைச் சேர்ந்த மணிவாசகன் ஏற்புரை வழங்குவார். (க)

## சம்பளம் வழங்கப்படவில்லை

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றுவதற்கென பருத்தித்துறை பிரதேச சபையில் நியமனம் பெற்று சேவையாற்றிவரும் 24 தற்காலிக ஊழியர்களுக்கும் கடந்த நான்கு மாத காலமாகச் சம்பளம் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-52)

## மீண்டும் வீதித் தடைகள்

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் அடிக்கடி நடைபெறும் வன்செயல்களால் தீவகத்திலுள்ள அனைத்து இடங்களிலும் மீண்டும் வீதித் தடைகள் போடப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாகவும், அஞ்சல் அலுவலகம் முன்பாகவும் வீதித்தடைகள் போட்டிருப்பதால் மக்கள் அச்சத்துடன் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (து-72)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

(வவுனியா)

வவுனியா சாஸ்திரிக் கூளாங்குளம் பழைய ஊர்காட்டுப்புரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவரின் சேட்டுப் பொக்கற்றில் இருந்து எடுக்கப்பட்ட அடையாள அட்டையின்படி இறந்தவர் வவுனியா தெற்கைச் சேர்ந்த பெனடிக் தேவதாஸ் (வயது-39) எனக் கூறப்படுகின்றது.

குறித்த நபர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதை அறிய பிரேத பரிசோதனை நடத்தப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையின் மூலமே கொலை பற்றிய விபரங்களை அறியலாம் எனவும் பொலிஸார் கூறுகின்றனர். (க)


## சுன்னாகம் மயிலணி சிவன்கோவில் மஹா கும்பாபிஷேகம்




12.06.2006 திங்கட்கிழமை

(12ஆம் நாள்)

நல்லார் சேரும்மயி லணியார்

பறையுஞ் சங்கும் பலியும்
பண்ணும் ஓவாப் பதியெங்கும்
குறைவொன் றில்லாக் கோலம்
கொண்டு அடியார் வந்து குழுமி
மறையின் ஒலியும் ஓமப்
புகையும் மனத்தை மகிழ்விக்க
சிறைய ணிமயில் சாயல்
நல்லார் சேரும்மயி லணியாரே

சிவ சண்முகவடிவேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# ஞானியார் நிலை

ஒரு குரு இருந்தார். ஜென்குரு. அவரிடம் ஒரு பழக்கம் வேறென்ன அவ்வப்போது கொஞ்சம் திருடுவார் அவ்வளவுதான் பெரிதாக ஒன்றும் திருடமாட்டார் அவர் ஈடுபடுவதெல்லாம் சின்னச்சின்னத்திருட்டுத் தான். அடுத்தவர்களுக்குச் சொந்தமான சின்னச் சின்னப்பொருட்களைத் திருடவேண்டியது. மாட்டிக் கொள்ளவேண்டியது. விடுதலையானதும் மீண்டும் திருட்டு இதுவே பழக்கமாகி விட்டது.

அவருடைய சீடர்களுக்கு இது ஒரு பெரிய புதிர். நமது குரு ஒரு பெரிய ஞானி. அவர் இப்படிச் செய்கிறாரே என்று நினைக்கும் போது மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. ஏன் இப்படிச் செய்கிறார் எனறு ஒன்றும் புரியவில்லை பொறுத்துப் பொறுத்துப் பார்த்து ஒரு நாள் கேட்டேவிட்டார்கள் ஏன் சுவாமி இப்படிச் செய்கிறீர்கள் ? செருப்பைக் கூட திருட வேண்டுமா நீங்கள்? உங்களுக்கு என்ன தேவை என்பதை எங்களிடம் சொன்னால் ஒரு செருப்புக்கடையையே கொண்டு வந்து குவித்துவிடமாட்டோமா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கும் ஒரு சிரிப்புதான் சிரித்துக்கொண்டேபேசாமல் போய்விட்டார் குரு.

அதன் பின்பும் அவர் வழக்கத்தை நிறுத்தவில்லை திருடுவது மாட்டிக்கொள்வது ஜெயிலுக்குப் போவது சீடர்கள் கேட்டால் சிரித்துக்கொண்டேபோய்விடுவது இப்படியே அவரது காலம் ஓடிப்போனது. கடைசியில் ஒரு நாள் அவர் மரணப்படுக்கையில் கிடக்கிறார். பக்கத்தில் அவரது சீடர்கள் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள். இப்போதாவது நமதுகுரு உண்மையைச் சொல்லமாட்டாரா? என்று நினைத்துக்கொண்டு அந்தப் பழைய கேள்வியையே திரும்பவும் கேட்டார்கள். சுவாமி! இப்போதாவது சொல்லுங்கள்! நீங்கள் ஏன் அடிக்கடி திருடிவிட்டு ஜெயிலுக்குப் போனீர்கள் அந்த செயலுக்கு என்ன காரணம்? அதிலுள்ள மர்மம் என்ன? என்று கேட்டார்கள்.

அதில் பெரிய ரகசியம் ஒன்றுமில்லை. சாதாரண விடயம் தான் என்றார் குரு. இவர்களுக்கு இன்னும் ஆச்சரியம். என்ன சாதாரண விடயமா? என்று நினைத்துக் குழம்பிப் பேய்நின்றார்கள். இப்போது அந்தக் குரு சொல்கிறார் வேறு ஒன்றுமில்லை நான் அடிக்கடி சிறைக்குள் போக வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அதனால் தான் திருடினேன். உள்ளே இருப்பவர்களைச் சந்தித்துப் பேசி அவர்களுக்கு நல்ல வழிகாட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்கு இதை விடசிறந்த வழி வேறு எதுவும் எனககுத் தெரியவில்லை. அதனால் தான் சின்னச்சின்ன திருட்டுகள் செய்தேன. எனது பயம் என்னவென்றால் எங்கே மாட்டிக கொள்ளாமல் போய்விடுவேனோ என்பது தான். மாட்டிக்கொண்டால்தானே உள்ளே போக முடியும். எனக்குத் தண்டனை கொடுக்கும் நீதிபதியும் மிகவும் நல்லவர். ஒவ்வொரு முறையும் ஆறு மாதத்திற்குக் குறையாமல் தண்டனை கொடுத்து விடுவார். உள்ளே எனக்கு ஒரே சந்தோஷம்தான். நிறையப் பேர் திருந்தி வெளியே வருவதற்கு நான் உதவிசெய்திருக்கிறேன் என்றார்.

உண்மையான ஞானிக்கு அரண்மனையும் ஒன்று தான் சிறைச்சாலையும் ஒன்றுதான் என்பதை வாழ்க்கை மூலமாக நிருபித்துக்காட்டியவர் அந்தக் குரு.

நமது ஆள் ஒருவன் அவனும் கொஞ்சம் வித்தியாசமான ஆள்தான் அடிக்கடி திருடுவான். மாட்டிக்கொள்வான். ஜெயிலுக்குப் போவான் என்னப்பா இப்படிச் செய்கிறாய் என்று கேட்டால்ஜெயில் என்பது எனக்கு மாமானார் வீடுமாதிரி சார் என்பான்.

"நிஜமாகவாக அப்படிச் சொல்கிறாய்" என்று கேட்டால "ஆமாம் சார் என்னுடைய மாமனாரும் அங்கே தான் ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கிறார்" என்கிறான்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் பதவியைப் பெற சந்திரிகா முயற்சி?

(கொழும்பு)

தற்போது லண்டனில் இருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பதவியைப் பெறுவதற்கு முயற்சிப்பதாக லண்டனிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாக இலங்கையிலிருக்கும் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, சந்திரிகாவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வீரர்களுக்கு மாதாந்தம் செலுத்தி வந்த 30 இலட்ச ரூபா சம்பளம் வெகு விரைவில் நிறுத்தப்படவுள்ளதாக, அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகாவின் பாதுகாப்பு வீரருக்காக மாதாந்தம் அரசாங்கம் இவ்வளவு பெருமளவு தொகையை செலவழிக்க முடியாது என்பதாலேயே பாதுகாப்பு அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# ஒஸ்லோ பேச்சுக்கள் தோல்வி முதல்வர் கருணாநிதி கவலை!

(கொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமை ஒஸ்லோவில் அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற விருந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தமை குறித்து தமிழக முதல்வர் கருணாநிதி தமது கவலையை தெரிவித்துள்ளார்.



இலங்கை பிரச்சினை தொடர்பாக இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் மௌனம் சாதிப்பதாக பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ள கருத்தை அவர் நிராகரித்துள்ளார்.

ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு மத்திய அரசுடன் முரண்படவில்லை.

அதேவேளை முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்தபோது இலங்கை அகதிகள் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் பதவியேற்ற அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்றும் தெரிவித்தார். (க-9)

## ஆசிரியர், மாணவிகளின் கவனத்திற்கு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையில் தரம்11 இல் கல்வி கற்கும் அனைத்து மாணவிகளையும் யாழ். மாவட்ட மென்வன்மைப்போட்டிக்கு தெரிவான மாணவிகளையும் அனைத்து ஆசிரியர்களையும் இன்று திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமூகமளிக்குமாறும் பாடசாலை அதிபர் செல்வமலர் சுந்தரேசன் கேட்டுள்ளார்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. உயர்தர மாணவிகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு சமூகமளிக்குமாறும் பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (க-52)

## வங்காலை படுகொலைக்கு அரசாங்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

மன்னார் வங்காலை பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பக அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மன்னார் நகரிலிருந்து சுமார் 7 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சோமஸ் புரியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளமை மனிதாபிமாணமற்ற கொடூரமான செயல்.

ஒரு தச்சுத் தொழிலாளியின் குடும்பம் கூட்டாக கொலை செய் யப்பட்டுள்ளமை குறிப்பாக 2 சிறுவர்களும் வெட்டிக் கொத்தி கொடூரமாக கொலை செய்யப்பட்டமை மன்னிக் முடியாத குற்றமாகும். குற்றவாளிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனை வழங்க அரசு நட வடிக்கை எடுத்துள்ளது என்றுள்ளது.

இதேவேளை, இந்துப் படுகொலைகள் பற்றி பாது காப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய றம்புக்வெல கருத்து தெரிவிக்கையில், இக்கொலைக்கு படையினரே காரணமென விடுதலைப்புலிகள் தெரிவித்த குற் றச் சாட்டுக் களை முற்றாக நிராகரிக்கின்றேன் என்றார். (க-9)

## தமிழர்களின் பயண அச்சுறுத்தல்; க.கா.குழுவிடம் எழிலன் முறையீடு

(திருகோணமலை)

திருகோணமலை மற்றும் மூதூர் இடையே தமிழர்களின் பயண அச்சுறுத்தல் குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் சி.எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

தரைவழியாகவும், கடல்வழியாகவும் திருமலைக்கும் மூதூருக்கும் இடையே பயணம் மேற்கொள்ளும் தமிழர் களை இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரும் அச்சுறுத்தி வரு கின்றனர் என்றும் எழிலன் தெரிவித்துள்ளார்.

மூதூரிலிருந்து திருமலைக்குச்சென்ற இரு பய ணிகள் நேற்று முன்தினம் பிற்பகல் சுட்டுக்கொல்லப்பட்டதையும் தனது முறைப்பாட்டில் எழிலன் சுட்டிக்காட்டியுள்ளார். (கு)

## அகதிகளாக வரும் ஈழத்தமிழர்களை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டும்

### பழ.நெடுமாறன் தமிழக அரசிடம் வேண்டுகோள்



இலங்கை அரசின் கொடூரமானதாக்குதலுக்கு அஞ்சி தமிழகத்திற்கு வரும் ஈழத் தமிழர் களை கண்ணியத்துடனும் மனிதாபிமானத் துடனும் நடத்துமாறு பழ நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழத்தமிழர்களை அகதி முகாம்களுக்குள் வைத்திருக்கும் நிலையை தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் ஈழத்தில் அவலங்களைச் சந்தித்து அவதிக்குள் உள்ளாகி இருக்கும் ஈழத்தமிழர்கள் தமிழகத்திலும் அலத்தையும் அவமரியாதையும் சந்திப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் ஈழ அகதிகளுக்கு சீரான முறையில் நிவாரணம் வழங்கப்படவேண்டும் தாமாக விரும்பி தாயகம் செல்ல முயன்றால் மட்டுமே அவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

அவ்வாறு அவர்கள் தாயகம் திரும்பும் போது இலங்கையில் அமைதி நிலை திரும்பிவிட்டதா என்பதை அவதானித்து பாதுகாப்பான முறையில் இலங்கை திரும்ப ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையை பார்க்கும் போது மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கான அறி குறியே தென்படுகின்றது. இதனால் மென்மேலும் ஈழ அகதிகள் தமிழகம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு வரும் எமது சகோதரர்களுக்கு எம்மால் முடிந்த அளவு உதவிகளை செய்வோம் என்றார் நெடுமாறன். (கு)

## நினைவு நிகழ்வுகள்

சுதந்திரபுர படுகொலையினதும் லெப்.கேணல் அன்புவின் 8ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று முன் தினம் மாலை சுதந்திரபுரத்தில் நடைபெற்றது.

சுதந்திரபுர கிராம சேவையாளர் சுந்தரலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வின் சிறப்புரையினை நீதி நிர்வாகத்துறைப் பொறுப் பாளர் பரா ஆற்றினார். தொடாந்து சங்கநாதம் கலை நிகழ்வும் நடைபெற்றது. (கு)

## தாதியர் பயிற்சிக்கல்லூரிகளுக்கு வட-கிழக்கிலிருந்து குறைந்தளவு மாணவர்களே விண்ணப்பிக்கின்றனர்

### அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

உயர் கல்விக்காகவும் மேலதிக பயிற்சிகளுக்காகவும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் மருத்துவர்களும் மருத் துவ தொழில்நுட்பவியலாளர்களும் மீண்டும் நாட்டுக்கு திரும்பாமல் அங்கேயே தங்கிவிடுவதனால் இங்கு மருந்துவர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்படுகின் றது.

என சுகாதார போஷாக்கு நலன்புரி அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தாதியர் பயிசிக் கல்லூரிகளில் கற்பதற்கு போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித் தார்.

தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்தல் தொடர்பான சட்டமூல விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார். அமைச்சர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள தாதியர் பயிற்சி கல்லூரிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் போதியளவில் விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை.

க.பொ.த.உயர்தரத்தில் விஞ்ஞான பாடம் கற்று மூன்று பாடங்களில் குறைந்தது சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.

ஆனால் தாதியர்களாக பயிற்சிபெறுவதற்கு அநேகமானோர் விரும்புவதாக தெரியவில்லை.

இதனால் க.பொ.த.உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எமது அமைச்சு கோர முற்பட்ட போது தாதியர் சங்கங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அரசாங்கத்தினால் என்ன செய்ய முடியும். தாதியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு தென்பகுதியில் கணிசமான அளவுக்கேனும் ஆட்களைச்சேர்த்துக்கொண்டாலும் வடக்கு கிழக்கில் மிகவும் மோசமாகவே இருக்கின்றது. அங்குள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரிகளில் கற்பதற்கு இன்னமும் வெற்றிடங்கள் உள்ளன என்றார். (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006




## இங்கிலாந்து பலவீன வெற்றி ஆர்ஜென்டீனா அபார வெற்றி

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உலக கோப்பை உதை பந்தாட்ட இரண்டாம் நாளான நேற்று முன்தினம் முதல் போட்டியில் இங்கிலாந்து - பராகுவே அணிகள் மோதியது இதில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 2 ஆவது போட்டியில் டிரினிடாட்டும் சுவீடனும் கோல் போடாமல் சமநிலையில் முடிந்தது. 3 ஆவது போட்டியில் ஆர்ஜென்டீனா ஐவரி கோஸ்டை 2-1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றது.



பராகுவே அணித்தலைவர் கார்லஸ் கமாரா தனதுஅணிக்கே கோல் அடிக்க இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. பராகுவேயை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி உலக கோப்பை பயணத்தை வெற்றிகரமாக இங்கிலாந்து ஆரம்பித்தது. ஜேர்மனியில் 18 ஆவது உலக கோப்பை உதைபந்தாட்ட தொடர் நடைபெறுகின்றது. நேற்று முன் தினம் நடந்த பி பரிவு ஆட்டத்தில் இங்கிலாந்து , பராகுவே அணிகள் மோதின. 40 ஆண்டுகளுக்குப் பிறகு உலக கோப்பையைகைப்பற்றும்உறுதியுடன் களமிறங்கியது இங்கிலாந்து. பராகுவேக்கு ஆரம் பத்திலேயே நேரம் சரியில்லை.

*டென்ஷன் நிமிடங்கள்:* நான்காவது நிமிடத்தில்தான் அந்த பரிதாபம் அ்ரங்கேறியது. அதாவது இங்கிலாந்து அணிக்கு மேலதிக உதை (Free kic) வாய்ப்பு கிடைத்தது. இதை அடிக்க வந்தார் கப்டன் பெக்காம். ஓடிவந்து வலது காலால் அடிக்கிறார். பந்து கோல் போஸ்ட் அருகே பறந்து வருகிறது. பராகுவே வீரர்கள் மத்தியில் டென்ஷன் ஏறுகிறது. அனைவரும் அன்னாந்து மேலே பார்க்கின்றனர். இந்த நேரத்தில் அவசரப்பட்ட பராகுவே அனுபவ அணித்தலைவர் கார்லஸ்கமாரா பந்தை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென தலையால் முட்டுகிறார். இவரது நேரம் பந்து வெளியே போகும் என நினைத்தால் கோல்கீப்பர் ஜஸ்டோ வில்லைரையும் மீறி வலைக்கு உள்ளே சென்று சேம் சைட் கோலாக மாறுகிறது. இங்கிலாந்து வீரர்கள் கோல் கிடைத்த கொண்டாட்டத்தில் துள்ளிக் குதித்தனர். தலைவனே தவறு செய்ய பராகுவே வீரர்கள் தலைகுனிந்து நின்றனர்.

*இங்கிலாந்து ஆதிக்கம்:* இத்தோடு முடிந்துவிடவில்லை பராகுவேயின் துரதிருஷ்டம் சிறிது நேரத்தில் இந்த அணியின் கோல் கீப்பர் ஜஸ்டோ வில்லர் வலது காலில் காயமடைந்து வெளியேறினார். இவருக்குப் பதிலாக அல்டோ பாபாடில்லா மாற்று கீப்பராக வந்தார். இப்போட்டியில் இங்கிலாந்துவீரர்கள் பக்கம்தான் பந்து இருந்தது. ஆனாலும் முன்கள வீரர்களான பீட்டர் கிரவுச் , மைக்கேல் ஓவன் கோலாக மாற்ற திணறினர். முதல் பாதி முடியும் நேரத்தில் பாரகுவேக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. இந்த அணியின் வால்டஸ் அடித்த பந்து கோல் போஸ்டில் இருந்து நூலிழையில் விலகிச் செல்ல இங்கிலாந்தின் முன்னிலை அப்படியே (1-0) நீடித்தது.

*இரண்டாவது பாதி:* இரண்டாவது பாதியிலும் இங்கிலாந்து ஆதிக்கம் செலுத்தியது. நட்சத்திரவீரர் ஓவன் தொடர்ந்து ஏமாற்ற 53 ஆவது நிமிடத்தில் இவருக்குப் பதிலாக ஸ்டுவர்ட்டவுனிச் களமிறக்கப்பட்டார். இங்கிலாந்தின் மத்தியகள கூட்டணியான ஸ்டீவன் ஜெரார்ட் , பிராங் லாம்பார்ட் கலக்கினர். அதிலும் பராகுவே கீப்பர் அல்டோ பாபாடில்லாருக்கும் , இங்கிலாந்து லாம்பார்ட்டுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. லாம்பர்ட் கோல் அடிக்க முயற்சிப்பதும் அதை அல்டோ தடுப்பதும் தொடர்ந்தது.

*முரட்டு ஆட்டம்:* கடைசி கட்டத்தில் இரு அணிகளும் முரட்டு ஆட்டத்தில் ஈடுபட இங்கிலாந்து அணியின் ஸ்டீவன் ஜெரார்ட் , பீட்டர் கிரவுச் மஞ்சள் அஞ்சல் அட்டை பெற்றனர். இறுதியில் இங்கிலாந்து 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3 புள்ளிகளை முழுமையாகப் பெற்றது.

*ஆறுதல் வெற்றி:* பராகுவேயை பொறுத்த வரை முன்கள வீரர் ரோக்சான்டா கிரஸ் ஏமாற்றினர். தற்காப்பு பகுதியும் பலவீனமாக இருந்தது. இதனால் இங்கிலாந்து வீரர்கள் அடிக்கடி பராகுவே.கோல் போஸ்ட் அருகே சென்று வந்ததை காண முடிந்தது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இங்கிலாந்தின் ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு அமையவில்லை.



பெக்காம் போன்ற நட்சத்திர வீரர்கள் இருந்தும் கோல் அடிக்க முயல வில்லை. பராகுவேயின் போராட்டத்திற்கு சரியான பதிலடி கொடுக்காதது அரங்கில் இருந்த இங்கிலாந்து ரசிகர்களுக்கு ஏமாற்றத்தையே தந்தது. ஒருவழியாக வெற்றி பெற்றதும் மட்டுமே இ[illegible]க்கு ஆறுதல் தந்தது.

## சுவீடனை சமாளித்த அறிமுக அணி டிரினிடாட்

உலக கோப்பை கால்பந்து தொடரில் 2ஆவது போட்டியில் சுவீடன் - டிரினிடாட் அன்ட் டுபாகோ அணிகள் மோதிய ஆட்டம் கோல் அடிக்காமல் சமநிலையில் முடிவடைந்தது.

அறிமுக அணியாக களமிறங்கிய டிரினிடாட் அசத்தலாக ஆடி ரசிகர்களின் ஆதரவைப் பெற்றது. ஜேர்மனியில் உள்ள டார்ட்மண்ட் நகரில் நடந்த லீக் சுற்றின் பி பிரிவு ஆட்த்தில் சுவீடன் , டிரினிடாட் அன்ட் டுபாகோ அணி ..ள் மோதின. ஆரம்பத் தில் சுவீடன் ெ.ருக்கடி கொடுத்தது. ஆட்டத்தின் நா..காவது நிமிடத்தில் கிடைத்த பிரிகிக் (மேலதிக உதை) வாய்ப்பை இந்த அணியின் ஹென்ரிக் லார்ன் வீணாக்கி னார். டிரினிடாட் அணியின்கோல் கீப்பர் ஷாகா ஹிஸ்லாப் அபாரமாக தடுத்து அசத்தி னார். அனுபவ சுவீடனின் திணறல் ஆட்டம் தொடரத முதல் பாதியில் கோல் எதுவும் அடிக் கப்படவில்லை.

*10 வீரர்கள்:* இரண்டாவது பாதி ஆரம்பமாகியதும் அதிர்ச்சி! 46 ஆவது நிமிடத்தில் இரண்டாவது முறையாக மஞ்சள் அட்டை பெற்ற டிரினிடாட் அணியின் ஏவரி ஜான் வெளி யேற்றப்பட்டார். இதையடுத்து மனம் தளராமல் 10 வீரர்களுடன் கலக்கலாக ஆடியது. கடைசிக் கட்டத்தில் சுவீடன் வீரர்கள் பதற்றம் அடைந்தனர். லாங் பாஸ் லாங் ஷாட் அடித்து கோல் அடிக்க பார்த்தனர். 77ஆவது நிமிடத்தில் டோபியாஸ் விலகல் மசனுக்கு பதிலாககிம் கால்ஸ்டிராம் , மாத்தியாஸ் ஜான்சன் மாற்று வீரர்களாக வந்தனர். இந்த மாற்றம், சுவீடனுக்கு கைகொடுக்க வில்லை. இறுதியில் போட்டி சமநிலை (0-0) ஆனது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன. அறிமுக அணியாக களமிறங்கிய டிரினிடாட், சுவீடனை சமா ளித்து உலக கோப்பை வரலாற்றில் தனது ஒரு புள்ளியைப் பெற்றது பெரிய விஷயம். தவிர, முக்கிய வீரர் வெளியேற்றப்பட்ட போதும் அசராமல் ஆடியடிரினிடாட் இத்தொடரில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்த் நிை றய வாய்ப்பு உள்ளது.

## ஆர்ஜென்டீனா வெற்றி

உலக கோப்பை கால்பந்து தொடரில் ஆர்ஜென்டீனாவின் வெற்றி அலை ஆரம்பமானது. முதல் போட்டியில் ஐவரி கோஸ்டை 2-1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வீழ்த்தியது. ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. ஹாம் பர்க்கில் நேற்று முன்தினம் நடந்தசி பிரிவு லீக் போட்டியில் இரண்டு முறை சாம்பியன் ஆர்ஜென்டீனா , அறிமுக ஐவரி கோஸ்ட் அணிகள் மோதின. இரண்டாவது நிமிடத்திலேயே ஆர்ஜென் டீனாவுக்கு மேலதிக உதை வாய்ப்பு கிடைத்தது. இதை ஜுவான் ரிக்கிள்ம் வீணாக்கினார். 15ஆவது நிமிடத்தில் ராபர்ட் அயாலா தலையால் முட்டிய பந்தை ஐவரி கோஸ்ட் கோல் கீப்பர் ஜீன் ஜாக்ஸ் டிசி, கோல் எல்லையை தாண்டி பிடித்ததாக சர்ச்கை எழுந்தது. இதற்காக நடுவரிடம் அயாலா வாதாடியும் பலன் கிடைக்கவில்லை. பின்னர் 24 ஆவது நிமிடத்தில் இன்னொரு மேலதிக உதை கிடைத்தது. இம்முறை ஜுவான் ரிகிள்ம் பந்தை அடிக்க ஹெர்னான் கிரஸ்போ



அருமையான கோலாக மாற்ற ஆர்ஜென்டீனா முன்னிலை (1-0) பெற்றது. மூன்றாவது உலக கோப்பையில் ஆடும் கிரஸ்போ தனது இரண்டாவது கோலை பதிவு செய்தார். இதற்குப் பிறகு 38ஆவது நிமிடத்தில் சேவியர் செவியாலோ பந்தை அழகாக கடத்திச் சென்று ஐவரி கோஸ்ட் கோல்கீப்பர் ஜீன் ஜாக்ஸ் டிசியை ஏமாற்றி அழகான கோல் அடித்தார். இதையடுத்து ஆர்ஜென்டீனா 2-0 என்ற முன்னிலை பெற்றது. முதல் பாதி முடிவில் இதே முன்னிலை நீடித்தது. இரண்டாவது பாதியில் கோல் அடிக்க ஐவரி கோஸ்ட் கடுமையாக போராடியது. 82ஆவது நிமிடத்தில் இந்த அணியின் திடியர் டிராக்போ மின்னல் வேகத்தில் கோல் அடித்து அசத்தினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் 85 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டீனாவின் மேக்சி ரோட்ரிக்ஸ் அடித்த பந்து வலைக்குள் சென்றது. ஆனல் நடுவர் வெளிப்பகம் (Off side) என்று கூறி நிராகரித்துவிட்டார். இறுதியில் ஆர்ஜென் டீனா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்ற புள்ளிகளை முழுமையாக பெற்றது.

### அமிர்தன்

வந்தார் மரடோனா: இப்போட்டியை காண ஆர்ஜென்டீனா ஜாம்பவான் மரடோனா வந்திருந்தார். அரங்கில் இருந்தவாறு போட்டியின் ஒவ்வொரு அசைவையும் கைதட்டி ஆர வாரம் செய்து உற்சாகமாக கண்டுகளித் தார்.

### இலங்கை நேரப்படி இன்று நடைபெறும் போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் (இரவு) |
|---|---|---|
| அவுஸ்திரேலியா - ஜப்பான் | கைசர்ஸ்லடார்ன் | 6.30 |
| அமெரிக்கா- செக்குடியரசு | ஜெல்சன் கிர்சன் | 9.30 |
| இத்தாலி- கானா | ஹனோவர் | 12.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'By2'
சுனிதா வர்மா

## ஹீரோ ஆன ராஜகுமாரன்

டைரக்டர்களாக இருந்து ஹீரோக்களாக மாறுவோரின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. சேரன், எஸ்.ஜே. சூர்யா, தங்கர்பச்சான், சுந்தர்.சி வரிசையில் புதிதாக இடம் பிடிக்க போகிறவர் ஒரு ராஜகுமாரன்.

ஆம்... தேவயானியின் கணவர் ராஜகுமாரன் தான் இவருடன் சினிமாவில் ஜோடி சேர்வது யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. மற்றப்படி கதை, தயாரிக்கும் நிறுவனம் எல்லாம் தயார் என்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

## பச்சக்குதிரை



திரை விமர்சனம்

பிறரைத் துன்பப்படுத்தி பார்ப்பதையே இன்பமாக கருதும் ஒருவன் திருந்தி வாழ்ந்தால் எப்படி இருப்பான் என்பதைப் பொருத்திப் பார்க்கும் பார்த்திபன் பாணிக்கதை.

பச்ச முத்து அந்தக் குப்பத்தின் மிகப்பெரிய ரவுடி. தனது வருமானம், வசதிக்காக எதையும் செய்யத்துணிபவன். ஈவு இரக்கம் இல்லாமல் நடந்துகொள்ளும் அவனை அந்தக் குப்பத்தில் உள்ள அனைவரும் வெறுக்கிறார்கள். அவனுக்குத் திருமணம் நடக்கிறது.

மனைவியிடம் இரவில் மட்டும் நெருக்கமாக பழகும் அவன். பகலில் ராட்சஷனாக நடந்துகொள்கிறான். தாய், தாரம் என்று கூட பார்க்காமல் கேவலமாக அவர்களை திட்டித்தீர்க்கிறான். மனைவியும் அவனுடைய நடவடிக்கைகளை வெறுக்கிறாள்.

தன்னைப் பெரிய ஆள் என்று நினைத்துக்கொள்ளும் அவன். தான் இறந்தால் அந்தக் குப்பத்தில் உள்ளவர்கள் என்ன நினைப்பர்கள் என்பதை அறிய விரும்புகிறான். இதற்காக செய்யும் பரிசோதனை அவனுக்கு அதிர்ச்சியை அளிக்கிறது.

மக்களிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக தன்னை மாற்றிக் கொள்கிறான். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதால் ஏற்படும் மகிழ்ச்சி அவன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது. இதற்கிடையே அநியாய வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒருவனும், கலப்பட பொருள் விற்கும் ஒருவனும் சேர்ந்த பச்ச முத்துவை கொலை செய்ய முடிவு செய்கிறார்கள். முடிவு என்ன என்பது மீதிக் கதை.

ரவுடி பச்சமுத்துவாக பார்த்திபன். இரக்கம் இல்லாத ரவுடியாகவே மாறி மிரட்டுகிறார். ஒவ்வொரு நடவடிக்கையிலும் வெறுப்பை ஏற்றி நடிப்பில் வெற்றி பெற்றிருக்கிறார். மனைவியிடமும், தாயிடமும் பேசும் வார்த்தைகள் வரம்பு மீறியவை. ஆரம்பத்தில் வக்கிர, அக்கிரமங்களையும் பிறகு உருக்கத்தையும் பதிய வைக்கும் பார்த்திபன் பாணி 'பளிச்' அப்பா வேடத்திலும் அசத்துகிறார்.

நமீதா , பூவு என்ற பெயரில் குப்பத்துப் பெண்ணாக மாறி புதிய பரிமாணம் எடுத்திருக்கிறார். பார்த்திபனின் குறும்புகளுக்கு முழுமையாக ஈடு கொடுத்திருக்கிறார். கணவருக்காக ரவுடிகளிடம் மோதுவதும், அவன் திருந்தி விட்ட மகிழ்ச்சியில் பஸ்ஸை நிறுத்தி கலாட்டா செய்வதும் கலகலப்பு. உருக்கமான நடிப்பைக் காட்டுகிறார்.

'காதல்' தண்டபாணி, 'மிரட்டல்' மாறன், லதாராவ் சுதாகர், டி.பி.கஜேந்திரன், வியாகத் அலைகான், சித்ராலட்சுமணன் ஆகியோரும் குதிரையின் வேத்துக்கு ஈடு கொடுக்கிறார்கள்.

சபேஷ்முரளி இசை பரவசம். செல்வக்குமார் கமரா ப(ச்)சை.

கதை, திரைக்கதை, வசனம்,பாடல்கள், இயக்கம்: ரா.பார்த்திபன். பச்சக்குதிரைக்கு முரட்டுத்தனமாக 'இச்' கொடுத்து மின்னல் வேகத்தில் ஓடச் செய்திருக்கிறார். சுயநலத்துக்காக யாரைப்பற்றியும் கவலைப்படாமல் 'வன்முகம்' காட்டத் தயங்காத ஒருவனை கண்முன் கொண்டு நிறுத்துவதற்காக யாரைப் பற்றியும் கவலைப்படாமல் காட்சி, வசனம், பாடல்கள், இயக்கம் எல்லாவற்றிலும் வன்முக கொடுமையை இரண்டு இரண்டாக பதிய வைத்திருக்கிறார். கவர்ச்சி வாடை அதிகம் என்றாலும் குதிரையின் ஓட்டத்துக்கு அது நன்றாகவே பயன்பட்டிருக்கிறது.

பார்த்திபன் நினைத்ததை அவர் பாணியில் அழுத்தமாகச் சொல்லி அசத்தியிருக்கிறார். முன்பாதி பச்சை. பின்பாதி பரிகாரம்.

*பாயும் குதிரை.*

## நடிப்பு போட்டி



தேசிய விருது பெற்ற மீரா ஜாஸ்மினும், விருது கனவுகளோடு நடித்து வரும் சினேகாவும் ஒரு படத்தில் சேர்ந்து நடிக்கிறார்கள். பி.வாசு இயக்கத்தில் தெலுங்கில் தயாராகும் இந்தப் படத்தில் பாலகிருஷ்ணாவுடன் இவர்கள் 2 பேரும் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளனர்.

மீராஜாஸ்மினும், சினேகாவும் இந்தப் படத்தில் போட்டி போட்டு நடிப்பார்கள் என்று தெலுங்குப் பட வட்டாரம் எதிர்பார்க்கிறது.

சினேகா இந்தப் படத்தில் தான் முதன்முதலாக பாலகிருஷ்ணாவுடன் நடிக்கிறார்.

## கத்திச் சண்டை வீரர்

வடிவேலு அவர் நடித்து வரும் 'இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி' படத்துக்காக ஸ்டண்ட் மாஸ்டர் சூப்பர் சுப்பராயனிடம் முறைப்படி கத்திச் சண்டை பயிற்சி பெற்றிருக்கிறார். குதிரை ஏற்றப் பயிற்சியும் பெற்றுள்ளார். 20 நாட்கள் தினமும் 2 மணி நேரம் இந்தப் பயிற் சியைப் பெற்றார்.

வடிவேலு சவாரி செய்த அலெக்ஸீஸ் என்ற குதிரை இப்போது அவருடைய நண்பன் அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டதாம். வடிவேலு என்ன சொன்னாலும் கேட்கிறதாம்.

## தமிழ் மீது ஆசை



கிருத்திக் ரோஷன் நடித்து ஹிந்தியில் வெளியான 'கோயி மில்கயா' படத்தின் 2 ஆவது பாகம் 'கிரிஷ்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளிலும் 'டப்' செய்யப்படுகிறது. தமிழில் வெளியாகும் கிரிஷ் பட பாடல் கெசட் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

இதில் கிருத்திக் ரோஷன், அவரது தந்தை ராகேஷ் ரோஷன் மற்றும் பூஷன்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். அப்போது கிருத்திக் ரோஷன் 'எனக்கு தமிழ்மொழி பேசும் ஆசை இருக்கிறது. இப்போது தமிழ் தெரியாது. எனவே தமிழ்ப் படங்களில் நடிக்கமுடியவில்லை.

இந்திய மொழிகள் மீது இருக்கும் ஆசையால்தான் இந்தப் படத்தைத் தமிழிலும், தெலுங்கிலும் மொழி மாற்றம் செய்து வெளியிடுகிறோம்.

இந்தப் படத்தில் நான் டப்பிங் மூலம் தமிழ் பேசி உங்களை நெருங்கி வருகிறேன்' என்றார் சிரித்தபடியே...



'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி'
வடிவேல்

## சினிமாச் சிதறல்



'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்'
ஜெயம் ரவி – திரிஷா

## தனி இடம்



பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் 'மொழி' படத்தில் ஜோதிகா வாய் பேச முடியாத, பார்வையற்ற பெண்ணாக நடிக்கிறார். மேக்கப் இல்லாமல் இதில் நடிக்கும் ஜோதிகாவின் ஜோடி பிரிதிவிராஜ்.

வித்தியாசமான கதையைக் கொண்ட இந்தப் படத்தில் ஜோதிகாவின் முகபாவமே நடிப்பின் மூலதனமாக இருக்கும். ஜோதிகாவுக்கு திரை உலகில் இதன் மூலம் தனி இடம் கிடைக்கும் என்கிறது மொழி படக்குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச்சூழலை அரசே உருவாக்கியது தமிழீழவிடுதலைப்புலிகள் அறிக்கை

(கொழும்பு)

தமிழர் தாயகத்தின் 70 வீதமான நிலப் பரப்பை தன்னகத்தே கொண்டு கடல் பிரதேசத்தையும் தன்னகத்தே கொண்டு சொந்த சட்டங்கள் சுயாதீன நீதி நிர்வாகம் காவல் துறை உள்ளிட்ட முழுமையான நிர்வாக அமைப்புடன் அறிவிக்கப்படாத அரசாங்கமாக தமிழீழ அரசாங்கம் இயங்குகிறது. என தமிழீழ விடுதலைப்புலிகளால் ஒஸ்லோ பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, தற்போதைய அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்களால் தமிழர்க ளின் ஏகப்பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். அரச நிர்வாக கட்டுமானங்களுடனும் நவீன பாதுகாப்புப் படையுடனும் தமிழ்த் தேசத்தையும் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாத்து வருகின்றனர்.

சிங்களத் தேசத்தினது கொடூர ஒடுக்குமுறைகளை எதிர்த்து மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக அமைதி வழிப்போராட்டங்கள் மூலம் போராடினர் 2000ஆம் ஆண்டு ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்தது முதல் தமிழர் தேசத்தில் அமைதியையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் மீளக் கொண்டுவர வேண்டும் என்றுவிடுதலைப்புலிகள்விரும்புகின்றனர்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் சாதகமான ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் முத லில் நிராகரித்தது. பின்னர் தமது இராணுவச் சமநிலையை மீண்டும் வெளிப்படுத்தி 2001ம் ஆண்டு மீண்டும் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்து அமைதிப் பேச்சுகளுக்கான கதவுகளை தமிழீழ விடு தலைப் புலிகள் திறந்தனர். அதனது விளைவாக நோர்வே அனுசரணையுடன் 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

அதி உயர் பாதுகாப்பு வலயங்களினால் இடம்பெயர்ந்தோர் மீளக் குடியேறுதல் உள்ளிட்ட வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை மனிதாபிமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் உள்ளிட்டவற்றை நிறை வேற்றுவதற்காக இடைக்கால அரச நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என்றும் அமைதி முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபாட்டுடனும் தமிழீழ விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருகின்றனர்.

போர்க்காலத்தில் பாடசாலைகளில் படையினர் நடமாட்டம் இருந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் பாடசாலைகளில் படையினர் நடமாட்டம் அனுமதிக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபையை அப்போது பதவியிலிருந்த இலங்கை ஜனாதிபதி நிராகரித்த நிலையிலும் பேச்சுக்கள் முறிவடைந்து விடக் கூடாது என்பதற்காக நெகிழ்வுப் போக்கை விடுதலைப்புலிகள் கடைப்பிடித்தனர்.

தமிழர் தரப்பினது பங்கேற்பில்லாமலேயே இலங்கை அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதிஉதவியை டோக்கியோ மற்றும் அதற்கு முன்னைய வோஷிங்டன் மாநாடுகளில் கோரியது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளபடியான பொதுமக்களின் வாழ்விடங் கள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டு இடங்களிலிருந்து படையினர் வெளியேறத் தவறிவிட்டனர். அதி உயர்பாதுகாப்பு வலயத்தினால் உள்நாட்டிலேயே ஆயிரக்கணக் கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

பாடசாலைகளின் முன்பாக படையினர் நடமாடுவதால் குழந்தைகள் மன உளைச்சலுக்குள்ளாகி உள்ளனர். ஆயுதம் தரித்த ஆண்களால் பெண்கள் உடற்சோதனைக் குட்படுத்தப்பட்டனர்.

இணைத் தலைமை நாடுகள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கி இராணுவச் சமநிலையை மாற்ற உதவின. சர்வதேச பாதுகாப்பு சதிவலையை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் உருவாகியது.

இந்த நிலையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை இலங்கை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுக்க பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தம் செய்தனர்.

2003ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் வர்த்தக கடற்கலன் சர்வதேச கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டு கடலில் மட்டும் பல்வேறு சம்பவங்களின் போது 23 போராளிகள் கொல்லப்பட்ட போதும் விடுதலைப் புலிகள் பொறுமை காத்தனர். விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையிலான பேச்சுக்களை நடத்த இலங்கை அரசாங்கம் முன்வந்த நிலையில் அந்நாட்டு நாடாளுமன்றம் 2004பெப்ரவரி நாளன்று கலைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்ற தீர்ப்பை நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கினர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அகில இலங்கை தமிழர் காங்கிரஸ் ரெலோ மற்றும் ஈ.பி. ஆர். எல்.எப் (சுரேஸ் பிரிவு) ஆகியவை இணைந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாக இதனை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டு பாரிய வெற்றி பெற்றனர்.

20 ஆண்டுகால போரினால் ஏற்கனவே சீர்குலைந்த தமிழரது வாழ்க்கை ஆழிப்பேரலையால் பெரும் பாதிப்புக்குள்ளானது. வடக்கு- கிழக்கு மற்றும் தென்னிலங்கைக்கு சமஅளவில் உதவிகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்தது.

வடக்கு -கிழக்கில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் பார்வையிட விரும்பினார்.

நோர்வேயால் ஆழிப்பேரலைக்கான பொதுக் கட்டமைப்பு முன்வைக்கப்பட்டது. அரசியல் அதிகாரங்கள் தொடர்பான குறைபாடுகள் இருந்த போதும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் விடுதலைப்புலிகள் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்தனர். ஆனால் இலங்கையின் நிதி நிர்வாகத்தால் அந்தப் பொதுக் கட்டமைப்பும் இலங்கையால் முடக்கப் பட்டது.

இதனால் ஆழிப்பேரலையால் பாதிக்கப் பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கான சர்வதேச உதவிகள் கிடைக்கவில்லை அமைதி முயற்சிகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை செயற்படுத்தாத காரணத்தால் 2005ஆம் ஆண்டு தேர்தலை தமிழ் மக்கள் புறக் கணித்தனர். ஒற்றையாட்சிக்கு அப்பாலான அதிகாரப் பகிர்வை விரும்பாத சக்திகள் வெற்றி பெற்றனர்.

சர்வதேச சமூகத்துக்கு ஒரு நிலைப் பாட்டைத் தெரிவித்துவிட்டு இராணுவ வழித் தீர்வை நடைமுறைப்படுத்தவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிக்கிறார். தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைக்கும் வகையில் இராணுவம் மற்றும் புலனாய்வு அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் துணை இராணுவக் குழுக்களைப் பயன்படுத்தி நிழல் யுத்தத்தை நடத்தி வருகின்றார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், மாண வர்கள், அப்பாவி பொதுமக்களின் படு கொலையின் பின்னால் அரசபடையினரே உள்ளனர். மக்களினது சுதந்திர நடமாட்டத்தை முடக்கி எரிபொருள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்டவற்றைதடைசெய்து ஒரு போர்ச்சூழ் நிலையை அரசாங்கம் உருவாகி யுள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளபடியாக இராணுவ கட்டுப் பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை போராளிகள் பணிகளை மேற் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண் மற்றும் அப்பாவி மக்கள் குடியேற்றப் பகுதிகளின் மீது குண்டுத்தாக் குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஜெனீவாப் பேச்சுக்களின் தமிழ் மக்களைப் படுகொலை செய்யும் துணை இராணு வக் குழுவினர் ஆயுதக் களைவு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஏற் பட்டது.

ஆனால் ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 2007 பொதுமக்களும் 20 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச சமூகம், சர்வதேச ஊடகம், மற்றும் காண் காணிப்புகுழுவினர் தெரிவித்துள்ள நிலையிலும் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துணை இராணுவக் குழுவினர் இல்லை என்றே அரசாங்கம்கூறி வருகிறது.

நிராயுதபாணிகளாக வந்த படையினர் கப்பலை விடுதலைப் புலிகள் தாக்கியதாக ஒரு பொய்யான தகவலை அரசாங்கம் பரப்பி வருகிறது. கடற்பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த விடு தலைப் புலிகள் மீது படைத் தரப்பினர் நடத்திய பதில் தாக்குதலுக்குத்தான் தற்காப்புத் தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற் கொண்டனர். படையினரின் கப்பலில் இருந்த கண் காணிப்புக்குழுவினரது உயிருக்கோ கப்பலில் இருந்த படையினரது உயிருக்கோ ஆபத்தை ஏற்படுத்தும்நோக்கம் விடுதலைப் புலிக ளுக்கு இருக்கவில்லை.

2003 ஆண் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதியன்று கண்காணிப்புக்குழுவினரால் விடுதலைப் புலிகளின் கடற்படை அங்கீகரிக்கப் பட்டுள்ளது. வடக்கு-கிழக்கின் கடல் மற்றும் வான் இறைமையானது வடக்கு கிழக்கு மக்களுக்கானது. ஜெனீவா 2ஆம் சுற்றுப் பேச் சுக் களுக்கான தளபதிகளின் போக்குவரவு ஒழுங்குகளை ஏற்பாடு செய்யாமல் நிராகரித்தது இலங்கை அரசாங்கம். போர்ச் சூழலை உருவாக்கிவிட்டு முற்றாக விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டி பயங்கரவாதிகளாக சித் தரிக்கும் நடவடிக்கையைத் தொடருகிறது. இலங்கை அரசாங்கம் என்று அதில் கூறப் பட்டுள்ளது. (கு-5)

## இடம் பெயர்ந்தோர் வீடுகளில் திருட்டு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பருத்தியடைப்பு தம்பாட்டி, மெலிஞ்சி முனை ஆகிய இடங்களில் மக்கள் இடம் பெயர்ந்த வீடுகளில் பரவலாக திருட்டுகள் நடை பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (கு-72)

## திருஞானசம்பந்தர் குரு பூசை

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வழமைபோல் இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணியளவில் நல்லூர் ஸ்ரீசட்ட நாதஸ் சுவாமி ஆலயத்தில் இடம்பெறும் ஆலய பூசை யைத் தொடர்ந்து திருஞானசம்பந்தர் குரு பூசையும் அவர் அருளிய அற்புதத் திருப் பதிகங்கள் முன்றோதலும் இடம்பெறும்.

மாலை 5.00மணியளவில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி சிவகுருநாதன் ஒழுங்கை தோப்பு ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்திலும் திருஞானசம்பந்தர் குரு பூசை வைபவம் நடைபெறவுள்ளது. (க)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற் றுக் கிழமை காலை 7.30 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

17ஆம்திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பி.ப 4 மணிவரை அடியார்கள் சுவாமிக்கு எண்ணெய்க் காப்புச் சாத்தலாம். (க)

## கனடா வாகன விபத்தில் ஊர்காவற்றுறை இளைஞன் பலி

(ஊர்காவற்றுறை)

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கனடாவில் நிகழ்ந்த வானக விபத்தில் ஊர்காவற்றுறை முகாம் வீதி (கேம்ப் றோட்) டைச் சேர்ந்த ஜெயராசா ஜெபா (வயது 22) என்ற இளைஞர் உடல் சிதறிப்பலியானார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இவரை எதிரே வந்தவாகனம்ஒன்று மோதிச்சென்றதாக இவ ரின் உறவினருக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. (கு-72)

## வீதிகள் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் சந்தியில் இருந்து வேலணை துறையூர் சந்தி வரையி லான 5 மைல் தூரமுள்ள கடற்கரை வீதியும் கரம்பன் புனித செபஸ்தியான் ஆலயச் சந்தியில் இருந்து கண்ணகையம்மன் ஆலயம் வரையிலான இரண்டு மைல் தூரமுள்ள வீதியும் தற்பொழுது வீதி அபிவிருத்திச் சபை யினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-72)

## பரீட்சை

பல ஆண்டுகளாக நடைபெறாது இருந்த கணக்கியல் டிப்ளோமா பரீட்சை (பழைய பாடத்திட்டம் 1999) யாழ் உயர் தொழில் நுட்ப கல்லூரியில் நாளை முதல் தொடர்ந்து 15ஆம் திகதி வரை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்லூரிப் பணிப்பாளரை சந்திக்குமாறு பரீட்சாத்திகளை நாவாகம் கேட் டுள்ளது. (க-136)





யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய் வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட டாக்டர் திருமதி ருக்மணி உதய குமார் மற்றும் பொறியியலாளர் த.அ. செல்வராசா ஆகியோர் மங்கள விளக் கேற்றுவதையும் உடன் அதிபர் நா.சிவ நேசன் நிற்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. நாகராஜா மாணவி ஒரு வருக்குப் பரி[illegible] வழங்கு வதையும் ப[illegible]ங்களில்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாசி பட வழக்கில் நடிகர் விஜய்க்கு பிடிவிறாந்து!

சிவகாசி பட வழக்கில் நடிகர் விஜய்க்கு ஆற்காடு மாஜிஸ்திரேட்டு பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார். நடிகர் விஜய், நடிகை அசின் ஆகியோர் ஜோடியாக நடித்து கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது வெளிவந்த திரைப்படம் சிவகாசி இந்த படத்தை பிரபல சினிமா தயாரிப்பாளர் ஏ. எம்.ரத்னம் தயாரித்து இருந்தார். இந்த படத்தில் வக்கீல்களை இழிவு படுத்தும் காட்சிகள் இடம்பெற்று இருந்ததாக கூறி தமிழகம் முழுவதும் வக்கீல்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினார்கள்.

இது தொடர்பாக நடிகர் விஜய் டைரக்டர் பேரரசு படத்தில் வக்கீல் வேடத்தில் நடித்த எம்.எஸ்.பாஸ்கர் ஆகியோருக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் வக்கீல்கள் வழக்குகள் தொடர்ந்தனர். இதேபோல வேலூர் மாவட்டம் ஆற்காடு மாஜிஸ்திரேட்டு நீதிமன்றில் நடிகர்கள் விஜய், பாஸ்கர்ஈ தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம், டைரக்டர் பேரரசு படத்தை திரையிட்ட ஆற்காடு சினிமா தியேட்டர் உரிமையாளர் ஆகிய 5 பேர் மீதும் ராணிப்பேட்டையை சேர்ந்த வக்கீல் பகவத்குமார் சார்பில் ஆற்காடு வக்கீல் சங்க தலைவர் நந்தகுமார் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

வக்கீல்களை இழிவு படுத்திய இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் கூறி இருந்தார். இந்த வழக்கு விசாரணையின் போது ஆற்காடு சினிமா தியேட்டர் உரிமையாளர் அப்துல்லா ஷெரீப் திடீர் என இறந்துவிட்டார்.

இந்த வழக்கில் நடிகர் விஜய் உட்பட 4 பேருக்கு அனுப்பப்பட்ட சம்மனில் கடந்த 7ஆம் திகதி கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று மாஜிஸ்திரேட்டு உத்தரவிட்டிருந்தார். இதில் நடிகர் விஜய் மட்டும் நீதிமன்ற சம்மனை பெற்றுக்கொண்டார்.

கடந்த 7ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிமன்றில் நடிகர் விஜய் ஆஜராகவில்லை. இதையடுத்து அவருக்கு ஜாமீனில் வரக்கூடிய பிடிவிறாந்து பிறப்பித்து மாஜிஸ்திரேட்டு குணசேகர் உத்தரவிட்டார். நீதிமன்ற சம்மனை வாங்க மறுத்த நடிகர்பாஸ்கர், டைரக்டர்பேரரசு, தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் ஆகியோருக்கும் பிடி விறாந்து பிறப்பித்த மாஜிஸ்திரேட்டு இந்த வழக்கு தொடர்பான விசாரணையை அடுத்த மாதம் (ஜூலை 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (க)

WORLD NEWS உலக தரிசனம்

# குமுறும் எரிமலையை பொருட்படுத்தாமல் வீடுகளுக்கு திரும்பும் இந்தோனேசிய மக்கள்

(யோக்யகர்த்தா)

இந்தோனேசியாவில் மெராப் எரிமலை குமுறிக்கொண்டிருக்கும் போதும், தங்கள் இன்னுயிரை பற்றி கவலைப்படாமல் தங்கள் வீடு கால்நடைகள் மற்றும் நிலத்தை கவனிப்பதற்காக மக்கள் நேற்று முன்தினம் முகாம்களிலிருந்து வீடு திரும்பினர்.

இந்தோனேசியாவிலுள்ள யோக்யகர்த்தாவில் கடந்த மாதம் 27ஆம் திகதி நிகழ்ந்த பூகம்பத்தில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். லட்சக்கணக்கான மக்கள் படுகாயமடைந்தனர். இந்நிலையில் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிக்கு அருகிலேயே மெராப் என்ற எரிமலை குமுறிக்கொண்டிருக்கிறது. இது எப்போது வேண்டுமானாலும், வெடித்து சிதறும் அபாயம் இருப்பதால் இந்தோனேசிய அரசு அதைச் சுற்றிலும் வசிக்கும் 18ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைத்துள்ளது.

எனினும் பகல் பொழுதில் ஆண்கள் மட்டும் தங்கள் கிராமத்திற்கு சென்று வீடு நிலம் மற்றும் கால்நடைகளை பார்த்து பராமரித்துவிட்டு மாலையில் முகாமுக்கு திரும்புகின்றனர். இது குறித்து முகாமின் ஒருங்கிணைப்பாளர் அரீஸ் என்பவர் கூறுகையில், இது ஆபத்தானது என்று அவர்கள் உணரவில்லை அதனால் பகல் பொழுதில் தங்கள் கிராமங்களுக்கு சென்று திரும்புகின்றனர் என்றார்.

எரிமலை வெடிப்பதற்கான அறிகுறிகள்:- மலையின் உச்சியில் இடியோசையும் மின்னலும் ஏற்படுவதோ அல்லது விலங்குகள் கீழிறங்கி வெளியேறுவதோ எரிமலை வெடிப்பதற்கான அறிகுறிகள் என்று கிராம மக்கள் தெரிவித்தனர். கடந்த 1994ஆம் ஆண்டில் இந்த எரிமலை வெடித்தபோது 70பேர் உயிரிழந்தனர். அதற்கு முன்பு 1930ஆம் ஆண்டு வெடித்த போது ஆயிரத்து 300 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பிலிப்பைன்ஸ் எரிமலையும் குமுறத் தொடங்கியது

பிலிப்பைன்ஸில் உள்ள புளுசான் எரிமலை தொடர்ந்து சாம்பலை கக்கி வருகிறது. இதனால் ஆஸ்துமா ஏற்பட்டு கடந்த சனிக்கிழமை ஒருவர் உயிரிழந்தார். கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து 565 மீற்றர் உயரத்தில் இருக்கும் இந்த எரிமலை கடந்த புதன்கிழமை சாம்பல் நீராவி ஆகியவற்றைக் கக்கத் துவங்கியது.



எரிமலை அதன் உச்சியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் உயரம் வரை ஆவேசத்துடன் சம்பலைக் கக்கிறது. மழை போல் பொழியும் எரிமலை சாம்பலால் புளுச்சான் மலைச்சரிவில் இருக்கும் கேசிகுரான் நகரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே கேசி குரானை சேதப் பகுதியாக பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

எரிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களை உடனடியாக வெளியேற்றும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் எரிமலை குமுறி சாம்பலை வெளியேற்றும் கால இடைவெளி குறைந்து அது வெடிக்கும் அபாயம் உள்ளது. இதனால் எரிமலையைச் சுற்றி 4 கிலோ மீற்றர் வரை யாரும் செல்லக் கூடாது என்று பிலிப்பைன்ஸ் எரிமலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

புளுசான் எரிமலை இதுவரை 15முறை வெடித்துள்ளது. கடைசியாக 1994நவம்பரில் சீறியது. இது மட்டுமில்லாமல் பிலிப்பைன்ஸ் பகுதியில் 22எரிமலைகள் இன்றும் உயிரோட்டமாக உள்ளன. (க)

# அணுசக்தி ஒப்பந்தம் குறித்து இந்தியா-அமெரிக்கா இன்று பேச்சு

அணுசக்தி ஒத்துழைப்புஒப்பந்தம் குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் அதிகார பூர்வமான பேச்சுவார்த்தையை இன்று துவக்கவுள்ளன. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே சிவில் அணுசக்தி ஒப்பந்தம் ஏற்கனவே கையெழுத்தாகியுள்ளது. அமெரிக்கா பார்லிமென்டில் விவாதிக்கப்பட்டு வரும் இந்த ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பு முடிந்த பின்னர் அது நிறைவேற்றப்படும்.

இந்தியாவுக்கு அணுசக்தி எரிபொருள் மற்றும் தொழில்நுட்பங்களை வழங்க அமெரிக்க கூட்டத்தில் சில மாற்றங்கள் கொண்டு வரவேண்டியது அவசியமாகிறது. பார்லிமென்ட் உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இந்தியா எதிர்காலத்தில் அணு ஆராய்ச்சி மற்றும் சோதனை நடத்துவதை தடுக்கும் அம்சம் ஒப்பந்தத்தில் இல்லை. அதனால் இந்தியா அணு ஆயுத சோதனை நடத்தினால் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும் என்று அமெரிக்காவில் எதிர்ப்பு குரல்கள் ஒலிக்கின்றன.

புஷ் நிர்வாகத்துக்கும் அமெரிக்க பார்லிமென்ட் உறுப்பினர்களுக்கும் இடையே கருத்துப் போராட்டம் தொடர்ந்து வருகின்றது. இந்நிலையில் இருநாடுகளுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளது மூன்று நாட்கள் நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையில் இந்திய குழுவினருடன் அமெரிக்க வெளியுறவுத்துறை எரி சக்தித்துறை பாதுகாப்பு மற்றும் அணு ஆயுதப் பரவல் தடை பிரிவைச்சேர்ந்த பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் பங்கேற்பார்கள். (க)

# சீனாவில் உருவாகியுள்ள புற்றுநோய் கிராமங்கள் 30 கோடி மக்கள் மாசுபட்ட நீரை குடிக்கும் அவலம்

ஆசியாவில் மிகப்பெரிய நாடான சீனா பொருளாதாரத்தில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. மேற்கத்திய நாடுகள் பொறாமைப்படும் அளவுக்கு அதன் வளர்ச்சி உள்ளது என்று சொன்னால் மறுப்பதற்கு இல்லை.

அதேநேரத்தில் இந்த வியக்கத்தக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழிற்சாலைகளின் பெருக்கத்தினால் அந்நாட்டின் சுற்றுப்புறச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. புற்றுநோயால் பாதித்தவர்கள் நிறைந்த கிராமங்கள் பல சீனாவில் உருவாகியுள்ளன. பெரிய நாடான சீனாவில் முன்பு விளைநிலங்களாக பண்ணை நிலங்களாக இருந்த பல பகுதிகள் இப்போது தொழிற்சாலைகளால் பெருமளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் நாட்டின் வேலை வாய்ப்பு உட்பட சில விஷயங்களில் சாதகமான முன்னேற்றங்கள் இருந்தாலும் இந்த தொழிற்சாலைகளை ஒட்டிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் நோயால் பீடிக்கப்பட்டவர்களாகி விட்டனர். பல குடும்பங்கள் அழிந்துபோகும் அல்லது நொடிந்து போகும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சீன அரசு தரும் தகவல்கள் படி நாட்டில் உள்ள மக்களில் 30 கோடி பேர் மாசு படிந்த நீரையே குடிக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சீன தலைநகர் பீஜிங்கின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள தியான் ஜின் துறைமுகம் அருகேயுள்ள இக்டிடோ கிராமம் உட்பட பல கிராமங்களில் உள்ள மக்கள் பலவிதமான புற்று நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுவது நாட்டில் உள்ள மக்கள் சராசரியாக புற்றுநோயால் பாதிக்கப்படும் அளவை விட 30 மடங்கு அதிகமாக இருக்கிறது என்பதை தியான்ஜின் சுகாதாரத்துறை அதிகாரிகளே ஒப்புக்கொள்கின்றனர். இப்பகுதியில் தோன்றியுள்ள ரசாயன ஆலைகளும் அதனால் உருவாகும் மாசு படிந்த காற்றும் மற்றும் தண்ணீருமே காரணம்.

ஒரு ஆண்டுக்கு முன் இப்பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் ஜாவோ கூயன் என்பவர் தனது காலில் வலி இருப்பதாக குடும்பத்தாரிடம் தெரிவித்தார். இந்த வலி நாளுக்கு நாள் அதிகரித்து ஒரு கட்டத்தில் அவர் நடக்க முடியாத நிலைமை உருவானது அதன் பின்னர் அவர் மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்த போது அவருக்கு எலும்பு புற்று நோய் தாக்கியிருப்பது தெரியவந்தது. இதன் பின்னர் அவருக்கு ஆபரேஷன் செய்யப்பட்டது. இருந்தும் உடலின் மற்ற பகுதிகளுக்கும் புற்று நோய் பரவி விட்டதால் அவரால் உயிர்பிழைக்க முடியவில்லை என அவரின் மனைவி லீஷிமே கூறினார். ஜாவோ இரண்டு மாதங்களுக்கு முன்னர் இறந்தார். அவரின் பெயரையும் சேர்த்தால் இக்டிடோ கிராமம் மற்றும் அதன் அருகில் உள்ள கிராமமான லீகு வாய் ஜுவாங் கிராமம் என இரண்டு கிராமங்களில் இறந்தவர்கள் எண்ணிக்கை 250.

இக்டிடோ கிராமத்தின் இந்த நிலைமை சீனாவில் ஒட்டுமொத்த நிலவரத்தை பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் புற்றுநோய் கிராமங்கள் வரும் காலங்களில் சீனாவில் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கு இல்லை.

சீனாவில் கடந்த 1980ஆம் ஆண்டுகளில் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் துவங்கின. உள்ளூர் அரசுகள் புதிதாக துவங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிப்பதில் அதிக அக்கறை காட்டினவே அன்றி அவற்றால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. சுற்றுச்சூழல் சீர்கெடுவதை கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் அந்த நிர்வாகத்தினர் அதிக அக்கறை காட்டவில்லை.

புதிதாக உருவான தொழிற்சாலைகள் எல்லாம் தனியார்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அவர்கள் எல்லாம் லாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டனரே அன்றி சுற்றுச்சூழல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை. இக்டிடோ கிராமத்தை ஒட்டிய பகுதிகளில் இருந்து பண்ணை நிலங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு அங்கு தொழிற்சாலைகள் கட்டப்பட்டன.

இங்கு பெயின்ட் மற்றும் அதற்கான மூலப்பொருட்களை தயார் செய்யும் பேக்டரிகள் அதிக அளவில் துவங்கப்பட்டன. இங்குள்ள யாங்டிங் நதியை ஒட்டிய பகுதிகளில் எல்லாம் இந்த வகை தொழிற்சாலைகளே பெருமளவில் உள்ளன. இந்த ஆலைகளில் வெளியேறும் கழிவுகளால் யாங் டிங் நதியே பெருமளவு மோசமடைந்துவிட்டது. இங்குள்ள நிலத்தடி நீர் கூட எண்ணெய் படலம் கலந்ததாக உள்ளது. பண்ணைநிலங்களை தொழிற்சாலைகள் பாழ்படுத்தியதற்கு இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு எந்தவிதமான இழப்பீடும் வழங்கப்படவில்லை இப்பகுதியில் விளையும் நெல்லில் இருந்து எடுக்கப்படும் அரிசி மிகவும் பிரபலம். தற்போது தண்ணீர் எல்லாம் விவசாயத்திற்கு ஏற்ற வகையில் இல்லை. இங்கு விளையும் காய்கறிகளையும் யாரும் விரும்பி வாங்குவதில்லை. தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப இங்கு விளையும் பொருட்கள் உள்ளது என இப்பகுதியில் வசிக்கும் ஒருவர் கூறுகிறார். கடந்த 1990ஆம் ஆண்டுகளில் இப்பகுதிகளில் வசிக்கும் மக்களை சில வகையான நோய்கள் தாக்கிய போது இதற்கு காரணம் என்ன என்பதை பலரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒரு பெண்ணின் இளைய மகன் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட போது அவரின் ரத்தத்தில் பல விதமான கோளாறுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இருந்தும் அந்தப் பெண்ணால் எதையும் வெளியில் சொல்ல முடியவில்லை. பத்திரிகைகளுக்கோ மீடியாக்களுக்கோ எந்தவிதமான பேட்டியும் கொடுக்கக் கூடாது என்று இங்குள்ள அதிகாரிகள் அந்தப் பெண்ணை மிரட்டியுள்ளனராம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் பகுத்தறிவாலும் உண்மையைக்கண்டு பிடிக்கவேண்டும்.

-இங்கர்சால்

வலம்புரி

## நோர்வேயின் அறிவிப்பு நம்பிக்கை தருமா ?

இலங்கையில் அனுசரணைப்பணி தொடருமென நோர்வே அரசு அறிவித்துள்ளது.

ஒஸ்லோவில் அரசையும் விடுதலைப்புலிகளையும் சந்திக்கவைப்பதில் நோர்வே எதிர்கொண்ட சிக்கல்களையடுத்து ,சமாதான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வே விலகுமென்ற தகவல்கள் வெளியாகியிருந்தன.

இத் தகவல்கள் ஊகங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டதாயினும் இலங்கையில் மேற்கொண்டுள்ள அனுசரணைப்பணியை விலத்தப் போவதில்லையென நோர்வே அறிவித்துள்ளமை, ஊடகங்கள் வெளியிட்ட ஊகங்களுக்கு முடிபு கட்டுவதாக அமைந்தது.

அதே நேரம் சமாதான அனுசரணைப்பணியில் இருந்து நோர்வே விலகிக்கொள்ளும் என்ற செய்தியால் மக்கள் அதிர்ச்சியோ ,

அன்றி சமாதான அனுசரணைப் பணியை நோர்வே தொடருமென்ற அறிவிப்பால் மக்கள் ஆனந்தமோ அடையவில்லை.

என்ன நடந்தாலும் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளும் நிலையில் மக்கள் இல்லை. ஏனெனில் நோர்வேயின் அனுசரணைப்பணி மற்றும் யுத்த நிறுத்த உடன்படிக்கை என்பன அமுலில் இருக்கும்போதே குண்டுவெடிப்புக்கள், துப்பாக்கிச் சூடுகள், மர்மக்கொலைகள் , மனிதப்புதைகுழிகள் என்பன அரங்கேறிக்கொண்டே இருக்கின்றன.

அவ்வாறாயின் நோர்வேயின் அனுசரணைப் பணியில் எங்ஙனம் நம்பிக்கை ஏற்படும்.இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை மிக நீண்ட காலமாக பொருத்தப்பாடற்ற செயற்பாடுகளே நடந்து வருகின்றது.

நோர்வே சமாதான முயற்சியில் ஈடுபட ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்கின்றது.

எனவே முன்னுக்குப்பின் முரணான செயற்பாடுகளினால் இனப்பிரச்சினைக்கான சமாதான முன்னெடுப்புக்கள் சீர்குலைந்து போயின.

இந் நிலைமையை யாரேனும் உணர்ந்து கொள்வதாக இல்லை. யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றபோது சமாதான இலக்கை அடைவது முடியாத காரியமே.

நோர்வேயைப் பொறுத்தவரை அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் ஓர் அனுசரணைப் பணியை மேற்கொள்கிறதே தவிர யார் பிழை விடுகிறார்கள் என்பதை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தவோ அன்றி சமாதான அனுசரணைப் பணி முடியும் வரை விடுதலைப்புலிகளை தடை செய்ய் வேண்டாமென ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எடுத்துக்கூறுகின்ற தற்துணிபோ நோர்வேக்குக் கிடையாது.

அவ்வாறாயின் நோர்வேயின் சமாதான அனுசரணைப்பணி எவ்வாறு வெற்றி பெறும். இந்தக் கேள்வி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதால் அனுசரணைப்பணியில் நோர்வே இருந்தால் என்ன விலகினால் என்ன என்ற உணர்வு தற்போது ஏற்பட்டு விட்டது.

# தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கிராம சேவையாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பணிபுரிந்து வரும் அனைத்துக் கிராம சேவையாளர்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் மத்தி பிரதேச கிராம சேவையாளரான ஜோசப் ரட்ணராஜா இனந்தெரியாத சில நபர்களால் சுடப்பட்டதையடுத்தே இவர்கள் இந்தக் கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளனர்.

குறித்த கிராம சேவையாளர் கோப்பாய் தரவைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மனித புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் நீதிமன்ற பணிப்பின் பேரில் சமுகமளித்திருந்தார்.

இந் நிலையில் அவர் சுடப்பட்ட சம்பவத்துக்கும் புதைகுழி அகழ்வுச் சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்தில் பணி புரியும் கிராம சேவையாளர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

இதேவேளை, கோப்பாய் மத்தி பிரதேச கிராம சேவையா ளர் சுடப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிராம சேவையாளர்களும் விரைவில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(கு)

# வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூர் விதிமுறைகளுக்கு அமையவே அபி.திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்து

(கொழும்பு)

வெளிநாட்டு நிறுவனங்கள் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்யும் போது உள்ளூர் விதிமுறைகளுக்கு அமைய அவற்றை அமுல் செய்வது நல்லது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இதனைக் கடைப்பிடித்தால் வெற்றிகரமான பலன்களை பெறமுடியுமென்றும் அவர் தெரிவித்தார். புத்தளம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து மதிப்பிடுவதற்காக அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஒரு நாட்டை அபிவிருத்தி செய்யும் போது அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்வதற்கு பொருத்தமான இடங்களை தெரிவுசெய்வது முக்கியமானது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கற்பிட்டிப் பகுதியை உல்லாசப் பிரயாண வலயமாக மாற்றுவதற்கான திட்டம் குறித்து கூட்டத்தில் விளக்கம் கோரினார்.



இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காணிகள் குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்றும் திட்டத்தினை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். திருகோணமலை, அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் மூன்று உல்லாச பிரயாண வலயங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, சமுர்த்தி திட்டத்தை அமுல் செய்யும் போது 50 சதவீத முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு பணியாற்ற வேண்டுமென்றும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். (க-9)

# ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுமா?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வருவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகின்றது.

குறிப்பாக தென்மராட்சி, தீவகம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்து வருவதாக இப்பகுதி கல்விப்பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, மாணவர்களின் ஆங்கிலக் கல்வி இருள் சூழ்ந்ததாகவே காணப்படுவதாகவும் அண்மையில் வெளியான க.பொ. த.சாதாரண பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 20 வீதமானோரே திறமைச்சித்தியை பெற்றுள்ளார்கள் என்றும் ஏனையோர் சாதாரண சித்தியும் சித்தியின்மையும் பெற்றிருப்பது யாழ். மாவட்டத்தில் ஆங்கிலக் கல்வியின் தரம் வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறதாகவும் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் மாணவர்கள ஆங்கில பாடத்தில் கூடிய கவனம் எடுப்பதில்லை என்றும் அரசாங்கம் இலவச பாடபுத்தகங்களை வழங்கி இலவசமாக கல்வி கற்பித்தும் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் கூடிய கவனம் செலுத்தி ஆர்வத்துடன் கற்பதில்லை எனவும் ஆங்கில பாடத்தில் கவனம் செலுத்துவதற்கு பெற்றோர்கள் போதிய ஊக்கம் கொடுப்பதில்லை எனவும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து இந்நிலைமைகள் நீடிக்குமானால் மாணவர்களின் ஆங்கிலக் கல்வியின் தரம் மற்றும் எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகளை இழப்பதற்கு ஏதுவாக அமைந்து விடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (க-9)

# இலங்கையில் 17 வீதமாக காணப்படும் நீரிழிவு நோயாளர்களின் தொகை— 2016 இல் 30 வீதமாக அதிகரிக்கும்?

(கொழும்பு)

இலங்கையில் தற்போது 17 வீதமாகக் காணப்படும் நீரிழிவு நோயாளர்களின் தொகை இன்னும் பத்து ஆண்டு களுக்குள் 30 வீதமாக அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளதென இலங்கை நீரிழிவு நோயாளர் சங்கத்தின் கண்டி மாவட்ட தலைவர் பேராசிரியர் உபாலி இலங்கசேகர தெரிவித்தார்.

இலங்கை நீரிழிவு நோயாளர் சங்கத்தின் கண்டி மாவட்ட அமைப்பின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக இப்போதிருந்தே உரிய வேலைத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தவர்களையே இந் நோய் அதிகம் பாதித்துள்ளது. உணவு கட்டுப்பாடின்மை, போதிய தேகப் பயிற்சியின்மை போன்றவையே இந்நோய் வர முக்கிய காரணமாக அமைகின்றது.

வயோதிபர்களிடையே பெரும்பாலும் காணப்படும் நீரிழிவு நோய் தற்போது இந்நாட்டில் இளம் பராயத்தினர்களிடையேயும் அதிகமாக ஆட்கொண்டிருப்பதை அறிக்கைகள் [illegible] கூடியதாகவுள்ளது.

[illegible] இளம் சமூகத்தினர் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமூகத்தவர்களால் சிறுவர்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற உள ரீதியான பாதிப்புக்களும் நீரிழிவு நோய் ஏற்பட காரணமாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நகர பிரதேசத்தில் வசிக்கும் மக்களிடையே அதிகமாகக் காணப்படுகின்ற நீரிழிவு நோய் தற்போது கிராமிய மக்களிடையேயும் அதிகரித்துள்ளது.

இந்நோய் தொடர்பான போதிய விளக்கங்கள் இல்லாமையினாலேயே இந்நோய் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு நோய்கட்டுப்பாடு குறித்து அறிவூட்டப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார். (க-9)

### தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



அன்பு வாழ்வைப் பாலைவனமாக்காது. மாறாக பூஞ்சோலை ஆக்கும். நாம் கோபம் கொண்டிருப்பின் நம்மிடம் யாரும் வரமாட்டார்கள். அந்த நிலையில் நம்முடைய நல்ல செயல்கள் யாருக்கும் பயன்படாமல் குடத்தில் இருக்கும் விளக்குப் போல் நாம் இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க அரசு மறுத்தால்

# இலங்கைக்கான நிதி உதவிகளை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தும்

## சுவீடன் தூதுவர் கூறியதாக சிங்கள வார இதழில் செய்தி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கும் நிதியுதவிகளையும் நிறுத்தக்கூடுமென இலங்கைக்கான சுவீடன் தூதுவர் தெரிவித்ததாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வார இறுதியில் சுவீடன் தேசிய தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட வைபவம் ஒன்றில் பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தடையினால் இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடைந்து, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் மனித உரிமைகளை வழங்காது போனால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் உதவிகளை நிறுத்துவது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கவனம் செலுத்துமென்றும் சுவீடன் தூதுவர் தெரிவித்துள்ளதாகவும் அச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த வைபவத்தில் அரசாங்கப்பிரதிநிதிகளும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர். (ந-5)

## கிராமசேவையாளர்களுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதகதியில் முன்னெடுக்கும் நோக்கத்துடன் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை காணும் முகமாக தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த வெள்ளிக்கிழமை காலை வடமராட்சி தெற்கு, மேற்கு, வடக்கு, மற்றும் கிழக்குப் பிரதேசசெயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமசேவை அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடி உள்ளதாக அமைச்சு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களது பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை பலப்படுத்தி அவற்றை துரிதப்படுத்தும் முகமாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடும் திட்டத்தின் ஒரு கட்டமாகவே மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது குறித்தும் மக்களது அன்றாட பிரச்சினைகளை துரிதகதியில் தீர்த்து வைப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் மக்கள் நலன் சார்ந்த பணிகளில் ஈடுபடும் போது கிராமசேவையாளர்கள் எதிர்நோக்கும் தடைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-15)

## அச்சுறுத்தல் தொடர்ந்தால் கடமையை பகிஷ்கரிப்போம்

### கிராம உத்தியோகஸ்தர் சங்கம் அறிவிப்பு

கோப்பாய் கிராமசேவை உத்தியோகஸ்தர் யோசப் இரத்தினராசா ஆயுதம் தாங்கியவர்களால் கடந்த 9-ம் திகதி சுடப்பட்டு படுகாயப்படுத்தப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண கிராம உத்தியோகஸ்தர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் பிரஸ்தாப கிராமசேவை உத்தியோகஸ்தர் தனது கடமையை செய்ய முற்பட்டபோது ஆயுதம் தாங்கியவர்களினால் சுடப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாம் எமது கடமைகளை பயமின்றி நிறைவாக மக்களுக்குச் செய்ய முடியாதுள்ளது.

எனவே இந் நிலையில் எமது சங்கம் மேற்படி சம்பவத்தை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன் இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடக்காமல் எமது கடமைகளை சரிவரச்செய்வதற்கு ஆவன செய்து தருமாறும் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் உரியவர்களிடம் வேண்டிக் கொள்கிறோம்.

மேலும் இது போன்ற சம்பவங்கள் தொடருமெனில் எமது கடமைகளை பகிஷ்கரிப்பு செய்யும் நிலைக்குத்தள்ளப்படுவோமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## பேச்சை மீண்டும் ஆரம்பிக்க அரச குழு நோர்வே பயணம்

(கொழும்பு)

தடைப்பட்ட ஒஸ்லோப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் மங்கள் சமரவீர தலைமையிலான உயர் மட்டக்குழு நான்கு நாள் விஜயமாக நேற்றிரவு நோர்வேக்குச் சென்றுள்ளது.

இக் குழுவில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப், மீள்குடியேற்றத்திற்கான அமைச்சர் ரிச்சாட் பதியுதீன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

நோர்வேயில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் நோர்வேப்பிரதமர் மற்றும் அந் நாட்டு வெளிவிவகார அமைச்சர், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம், இலங்கைக்கான சமாதானத்தூதுர் ஆகியோரையும் இந்த உயர் மட்டக்குழு சந்தித்து கலந்துரையாடவுள்ளது. (ந-5)

## திருமலையில் சூடு இருவர் பலி

திருகோணமலை கிண்ணியாவில் இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 10.35 மணியளவில் குரங்குப்பாஞ்சான் உவர் வெட்டு என்ற இடத்தில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மாட்டுவண்டியில் விறகு வெட்டச் சென்றபோதே இவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

ஈச்சன்தீவைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி மதிவாணன் (வயது 42) பைசால் நகரைச் சேர்ந்த முகமது ரிமிஸ் ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர். (ந-5)

### வற்றாப்பளை அம்மன் திருவிழா

## முகமாலை சோதனைச்சாவடி இரவு 10 மணிவரை திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவையொட்டி இன்று திங்கட்கிழமை முகமாலை சோதனைச்சாவடி இரவு 10 மணிவரை திறந்திருக்குமென யாழ்.பாதுகாப்புத் தலைமையக மேஜர் ஏ.விஜேசிங்க விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினமும் முகமாலை சோதனைச்சாவடி இரவு 10 மணிவரை திறந்திருந்ததாகவும் அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## திருநெல்வேலியில்...

ஏ.பிரசாந்த் (வயது 13, திருநெல்வேலி), என்.வசந்தன் (வயது 23, திருநெல் வேலி), ரி.ரவீந்திரராஜா (வயது 40, கொக்குவில்)

காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-15)

## இலங்கையில்...

என்றும் கூறியுள்ளனர்.

ஜூலை மாதம் இலங்கையில் பெரும் யுத்தம் வெடிக்கும் அபாயம் பற்றி சர்வதேச இராஜதந்திரிகள் விடுத்த எச்சரிக்கையடுத்தே ஒஸ்லோவில் விடுதலைப்புலிகளை சந்திக்க இலங்கை அரசு நோர்வேயூடாக திட்டம் தீட்டியதாகவும் தெரியவருகிறது. (ந)

## நெதர்லாந்து வெற்றி

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் முதலாவது போட்டி செர்பியா -நெதர்லாந்து ஆகிய அணிகள் மோதின.

இதில் நெதர்லாந்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-5)

## மெக்சிக்கோ வெற்றி

மூன்றாம் நாள் இரண்டாவது போட்டியில் மெக்சிக்கோ-ஈரான் ஆகிய அணிகள் மோதின. இதில் முதல் முக்கால் மணி நேரம் வரை தலா ஒரு கோல்போட்டு இரு அணிகளும் சமநிலையில் இருந்தது.

கடைசி அரை மணிநேரத்தில் மெக்சிக்கோ கூடுதலாக இரண்டு கோல்போட்டு 3:1 என்ற கோல் கணக்கில் ஈரானை வீழ்த்தியது.




1வது அகவையில் சி.பி

COMPUTER ACADEMY SRI LANKA

1வது அகவையில் இன்று (12-06-2006) கால்பதிக்கும் கோண்டாவில் சி.பி கணினி நிறுவனம் மேலும் விரிந்து பரந்து கணினிக் கல்விப் பணியாற்ற வாழ்த்துகிறோம்.

மாணவர்கள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 12.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org